ஆஸ்திரேலியா
# எதிரொலி
ETHIROLI

குரல் 07 அதிர்வு 84 ஆனி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162




Transco CARGO
We love to deliver
ONLY TRANSCO DOES WEEKLY SHIPMENTS TO SRILANKA
Track your parcel online
Air delivery in 4-7 days
Door delivery availale
1300 187 267
TranscoCargo.com.au

SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| JUN 1 | JUL 12 |
| JUN 8* | JUL 19 |
| JUN 15 | JUL 26 |
| JUN 22* | AUG 2 |
| JUN 29* | AUG 9 |
| JUL 6 | AUG 16 |
| JUL 13* | AUG 23 |
| JUL 20 | AUG 30 |
| JUL 27* | SEP 6 |

*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

## கடந்த கால துயரங்களின் பாரங்களையெல்லாம் சுமப்பவர் 12

## 2024 இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் உயிர் பெற்ற ஜனநாயகம் வீழ்ந்தது எதேச்சதிகாரம் 04

## பிரிட்டனில் கட்டாய இராணுவ சேவை? 14

## தமிழ்த்தேசியம் பலமா? பலவீனமா? 18

## தமிழர்கள் ஒன்றிணைவதை இந்தியா விரும்பாது! 09


SBK AUTOMOTIVE
எங்கள் சேவைகள்
- காலமுறை பராமரிப்பு
- அனைத்து இயந்திர சேவைகள்
- பயண தகுதி சான்றிதழ்
- டயர் இறக்குமதி

www.sbkautomotive.com.au 41, பிளண்ட்கெட் சாலை, டென்டினொங், VIC 3175 03 9705 0245

EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
DANDENONG
நகை அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
© Bala 0420 877 303
GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!


ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டண்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# 2024 இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள்

# உயிர் பெற்ற ஜனநாயகம்

# வீழ்ந்தது எதேச்சதிகாரம்




அ.முத்துக்கிருஷ்ணன்

**2014** தேர்தலில் வெற்றி பெற்றது முதல் மோடியின் தலைமையிலான ஆட்சி இந்தியாவில் நடைபெற்று வருகிறது. 2019 தேர்தல்களிலும் அவர்களின் கூட்டணி மீண்டும் வெற்றி பெற்றதால் இடைவெளி இல்லாது 10 ஆண்டுகள் மோடி இந்தியாவின் பிரதமராக பதவி வகித்தார். கடந்த பத்து ஆண்டுகள் ஆட்சியின் மீது இந்திய மக்கள் அளிக்கப் போகும் முக்கியமான தீர்ப்பாக 2024 தேர்தல் கருதப்பட்டது. இந்தச் சூழலில் இந்தியாவின் பொதுதேர்தல் 2024 ஏப்ரல் 14 ஆம் திகதி தொடங்கி ஜூன் 1 ஆம் திகதி வரை நடைபெற்றது. ஏறக்குறைய 97 கோடி பேர் வாக்காளர்களாக உலகின் மிகப்பெரும் தேர்தல் திருவிழாவில் பங்கேற்றனர்.

“என் வாழ்க்கையில் எல்லாமே 130 கோடி மக்கள் தான். என்னுடைய வாழ்வு என்பது ஏழைகளுக்காக அர்ப்பணிக்கப் பட்ட வாழ்வு. ஏழைகளுடைய கௌரவத்திற்காகவும், மரியாதைக்காகவும் தொடர்ந்து என் வாழ்வு அர்ப்பணிக்கப் படும்” என்கிற ரீதியில் மோடி கடந்த 8 ஆண்டுகளாக ஒரு புறம் ஒரு துறவி போல பிம்பங்களை கட்டமைத்தவண்ணம் இருந்த போதிலும் அவரது மறுபக்கம் என்பது மக்களை வாட்டி வதைத்தது. பணமதிப்பிழப்பு என்று ஒரு நாளில் இந்த நாட்டு மக்களை நடுத்தெருவில் நிறுத்தியது முதல் எந்த திட்டமிடுதலும் இல்லாமல் ஜி.எஸ்.டி வரிவிதிப்புகளை அமுல்படுத்தியது தொடர்ந்து கோவிட் காலத்தில் மக்களை வாட்டி வதைத்தது வரை பத்து ஆண்டுகளுமே இவர்களின் குளறுபடிகளை அடுக்கினால் இமயமலையை அது விஞ்சி நிற்கும்.

குடியுரிமைச் சட்டத்திருத்தம், முத்தலாக் முறைக்கு தடை, காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து, உலகில் எங்கும் இல்லாத அளவு பெட்ரோல்- டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலையேற்றம் என எல்லாம் தலைகீழ் தான். வருடம் இரண்டு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு என்றார்கள், ஆனால் பத்து ஆண்டுகளில் வருடம் தோறும் இவர்களின் தவறான கொள்கைகளால் வேலை இழந்தவர்கள் இரண்டு கோடி பேர் என்றால் மிகையில்லை. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி பத்து ஆண்டுகளில் ஒரு போதும் இவர்களின் கட்டுக்குள் இல்லை. உணவுப் பாதுகாப்பு, பத்திரிகை சுதந்திரம், ஏழ்மை என பல தளங்களில் சர்வதேச அளவில் இந்தியாவின் தரமும், மதிப்பும் நாள் தோறும் சரிந்த வண்ணம் இருந்தது.

இது தவிர இந்தியாவில் மதத்தை, மாட்டிறைச்சியை, சாதியை முன்வைத்து பா.ஜ.க.வின் அடியாட்கள் படை நடத்திய கலவரங்களுக்கு கணக்கே இல்லை. இந்தியாவில் நடைபெற்ற விவசாயப் போராட்டங்களில் மாண்டவர்களின் எண்ணிக்கை 750 என்றால் இந்த அரசின் லட்சணத்தை யூகித்துக் கொள்க.

இந்தச் சூழலில் தான்’ 2024 தேர்தல்களில் எங்கள் கூட்டணி 400 மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெறும், இந்தியாவின் நிரந்தர மன்னராக மோடியே திகழ்வார்’ என்ற மமதையுடன் களம் இறங்கினார்கள். பாஜக தனியாகவே பெரும்பான்மை பெற்று,நாங்கள் ஆட்சிக்கு வந்து இந்தியாவில் அரசியல் அமைப்பு சட்டத்தில் மாற்றங்கள் செய்வோம், தேர்தல் ஜனநாயகத்திற்கே வேட்டு வைப்போம் என்கிற ரீதியில் வன்மம் கக்கும் பேச்சுகளை தினசரி பேசினார்கள்.

தேர்தல் பிரசாரத்தில் 421 முறை மதத்தை முன்வைத்து, இனத்தை முன்வைத்து மக்களை பிளவுபடுத்தும், சிறுபான்மையினரை சிறுமைப்படுத்தும் பேச்சுகளை மோடி உள்ளிட்ட தலைவர்கள் திட்டமிட்டுப் பேசினார்கள்.

அதனால் தான் இந்தத் தேர்தல் இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல் என்பதாக பெரும் எதிர்பார்ப்புகளுடன் நடைபெற்றது. 2014 முதல் 2024 வரை பத்து ஆண்டுகள் மோடியின் தலைமையில் நடைபெற்ற ஆட்சியில் இந்தியா வளர்ச்சியை அடைந்ததா வீழ்ச்சியை அடைந்ததா என்கிற பெரும் விவாதங்கள் இந்தியா முழுவதும் நடைபெற்றன

இந்தச் சூழலில் ஜூன் 4 ஆம் திகதி இந்தியாவின் பொதுத் தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகியுள்ளன. மோடியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 291 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இந்தியா கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. பாஜக தனித்த கட்சியாக 2019ல் 303 இடங்கள் வென்றது, இந்த முறை 2024ல் 240 இடங்கள் மட்டுமே பெற்று 63 இடங்களை இழந்து நிற்கிறது.

**(05ஆம் பக்கம் பார்க்க)**

# 2024 இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள்

# உயிர் பெற்ற ஜனநாயகம்

# வீழ்ந்தது எதேச்சதிகாரம்

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

2019ல் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற மோடி இந்த முறை வெறும் 1.5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்திலேயே வென்றார். பாஜகவின் மத்திய அமைச்சர்கள் ஸ்மிருதி இராணி, ராஜீவ் சந்திரசேகர், அஜய் மிஸ்ரா, அர்ஜுன் முண்டா, எல்.முருகன், மகேந்திர நாத் பாண்டே, ஆர்.கே.சிங்க்வீ, சுபாஸ் சர்கார், நிஷித் ப்ராம்நாயக், சாத்வி நிரஞ்சன் ஜ்யோதி உள்ளிட்ட பாஜகவின் பல முன்னணித் தலைவர்கள் படுதோல்வியைத் தழுவினார்கள்.

தமிழ்நாடு மற்றும் புதுவையில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி 40 தொகுதிகளில் போட்டியிட்டு 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. சில வருடங்களாகவே பாஜக தமிழ்நாட்டில் பலம் பெற்றுவிட்டது. மோடி தமிழகத்தின் ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட உள்ளார், கன்னியாகுமாரி எங்கள் தொகுதி, அண்ணாமலை கோயம்புத்தூர் தொகுதியை அப்படியே அல்வா போல் விழுங்கிவிடுவார் என்று வம்படித்துக் கொண்டிருந்தார்கள். மக்களின் நாடித் துடிப்பை அறியாத அவர்கள் முற்றாக மண்ணைக் கவ்வினார்கள்.

இந்தியாவின் 97 கோடி வாக்காளர்கள் உலகின் பெரும் தேர்தலில் பங்கேற்றதன் வழியே தாங்கள் தான் ஜனநாயகத்தின் கதாநாயகர்கள் என்பதை நிறுவியிருக் கிறார்கள். பாஜகவின் அகம்பாவத்திற்கும் மக்களை அவமதிக்கும் செயல்களுக்கும், எதிர்க்கட்சியினரை மனிதர் களாக கூட மதிக்காத போக்கிற்கும் சரியான பாடம் புகட்டி யிருக்கிறார்கள்.

பாஜக கட்சியினர், அவர்களது இந்துத்துவ மதவாத கொள்கையின் ஆதரவாளர்கள், இந்தியா ஒரு இந்து நாடா கவே அறிவிக்கப்பட வேண்டும், ஜனநாயகம் எல்லாம் தேவையில்லை, மோடி தான் மன்னர், இன்னும் 30 ஆண்டு களுக்கு அவரை அசைக்கவியலாது என்ற நினைப்புடன் இருந்தவர்களை இந்தத் தீர்ப்பு நன்றாகவே அசைத்திருக்கிறது.

ராகுல் காந்தியை ஒரு குழந்தையை போல் பப்பு என்று கேலி பேசுவது, மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிற்கு முறையான நிதி ஒதுக்கீட்டை செய்யாமல் ஒவ்வொரு முறையும் தமிழர்களின் உரிமைகளை பெற உச்ச நீதிமன்றத்தை நாடும் நிலையை உருவாக்குவது, நெருக்கடிகளைக் கொடுப்பது, கூட்டணிக் கட்சியின் தலைவர்களைக் கைது செய்வது, கூட்டணிக் கட்சிகளின் வங்கிக் கணக்குகளை முடக்குவது, ஒட்டு மொத்த தேசிய அளவிலான ஊடகங்களை விலைக்கு வாங்குவது, கட்டுப் படுத்துவது என கடந்த பத்து ஆண்டுகளாக மோடி செய்தது எல்லாம் அதிகாரக் குவிப்பு மட்டுமே. அவர் குஜராத்தில் முதலமைச்சராக இருந்தது முதல் இன்றைக்கு அவர் வகிக்கும் பதவி வரை எல்லாம் அதிகாரக் குவிப்பின் மையங்களே.

அதே போல் தனது கூட்டணிக் கட்சிகளின் தலைவர் களை அடிமைகள் போல் நடத்துவது, தனது கட்சி அமைச் சர்களையும் கூட பொதுவெளியில் அவமதிப்பது என்றால் இவர்கள் எதிர்கட்சித் தலைவர்களை எல்லாம் எப்படி நடத்தியிருப்பார்கள் என்பதை கொஞ்சம் யூகித்துப் பாருங்கள்.

ஜனநாயகத்தில் இவ்வாறான அதிகாரக் குவிப்பு முறையற்றது, இது சர்வாதிகாரத்திற்கே வழி வகுக்கும். இன்னொன்று ஜனநாயகத்தில் எதிர்க் கட்சிகளை, எதிர்க்கருத்து உள்ளவர்களை நாம் மதிக்க வேண்டும் ஏனெனில் ஜனநாயம் எதிர்ப்பு இல்லாத போது உயிரற்ற ஜடமாக மாறிவிடும்.

இந்த அதிகாரக் குவிப்பு, பொய்ப் பிரசாரங்கள், ஊதிப் பெருப்பிக்கப்பட்ட புள்ளி விவரங்களுடன் பொருளாதார வளர்ச்சியை ஒரு கானல் நீர் போல் காட்டுவது என இந்த சித்து விளையாட்டுகளுக்கு இது ஒரு சம்மட்டி அடியான



தீர்ப்பு என்றே நினைக்கிறேன்.

தேர்தல் ஜனநாயகத்தில் வெற்றி பெறுவது மட்டும் முக்கியமல்ல மாறாக எவ்வளவு பெரிய வெற்றியை பெறு கிறோமோ அவ்வளவுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விசுவாசமாகவும் அடிபணிந்தும், மக்களுக்கு என்ன நன்மை களைப் பெற்றுத்தர முடியும் என்பது குறித்து சிந்திப்பதும் அதன் பால் இயங்குவதும், நம்மை அர்ப்பணிப்பதும் முக்கியம், ஆனால் மேற்சொன்ன எல்லாம் கிலோ என்ன விலை என்று கேட்கும் ஒரு ஆட்சி தான் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்றுள்ளது.

இந்தத் தேர்தலில் மிக முக்கியமான திருப்புமுனை யாக உத்திரப் பிரதேசத்தின் முடிவுகள் பார்க்கப்படுகின்றன. யோகி தலைமையிலான ஒரு அராஜக அரசு அங்கே தனக்கு ஒவ்வாதவர்களின் வீடுகளை புல்டோசர் வைத்து இடிப்பது முதல் காவல்துறையை வைத்து கொண்டு அங்கே இருக்கும் சிறுபான்மையினரை, தலித்துகளை துன்புறுத்துவது வரை அவர் செய்யாத காரியமேயில்லை. இவ்வாறான எல்லா ஜனநாயக விரோதச் செயல்களையும் செய்து கொண்டே மறுபுறம் நாங்கள் ராமர் கோவிலை கட்டிவிட்டோம், இதோ மக்கள் இதற்காகவே எங்களை அரியணையில் ஏற்றிவிடுவார்கள் என்று பகல் கனவு கண்டார்கள். 2019ல் பாஜக உத்திரப் பிரதேசத்தில் 62 தொகுதிகளில் வென்றது ஆனால் இந்த முறை 33 இடங்களில் மட்டுமே வென்றுள்ளது.

### இந்தியா முழுமைக்கும்

ராமர் கோவில் கட்டப்பட்டுள்ள பைசியாபாத் தொகுதி யில் கூட பாஜக படுதோல்வியடைந்திருப்பது தான் இந்தத் தேர்தல் நமக்கு உணர்த்தும் செய்தி. மதமும் அரசியலும் ஒரு போதும் இணையக்கூடாது. மதத்தை ஒரு அரசியல் கருவியாக மாற்றுவது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது. பாஜக பக்தியை, மதத்தை, சாதியை தனது அரசி யல் மூலதனமாகக் கருதுகிறது. இனத் துவேசம், மதத் துவேசத்தை முன்வைத்து அந்த நெருப்பில் குளிர் காயலாம் என்று நினைக்கிறது, மக்கள் அதற்கு எதிரான தீர்ப்பை எழுதியிருக்கிறார்கள், ஜனநாயகத்தை உயிர்ப்பிக்க ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 84 ஆனி 2024 தொ.பே:1800 960 162

## அகதிகளும் ஆஸ்திரேலியாவும்

ஆண்டு தோறும் ஜூன் மாதம் 20ஆம் திகதி அகதிகள் வாரம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. தத்தமது நாடுகளில் அகதிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் வலிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக – ஏற்கனவே ஆபிரிக்க அகதிகள் நாளாக கொண்டாடப்பட்டு வந்த ஜூன் 20 ஆம் திகதி சர்வதேச அகதிகள் தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப் படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டின், ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் அமைப்பின் கணக்கெடுப்பின் படி சுமார் 114 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்த வர்களில் 40 வீதமானவர்கள் சிறுவர்கள். இவர்களில் 52 வீதமானோர் சிரியா ,ஆப்கானிஸ்தான், உக்ரைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்த இடப்பெயர்வு எண்ணிக்கை யானது ஆஸ்திரேலிய சனத்தொகையின் 4 மடங்குக்கும் அதிகமானது.

பொதுமக்கள் அகதிகளாக்கப்படுவதற்கு உலக வல்லரசு நாடுகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைகிறது. உலகத்தில் நடைபெறும் போர்களில் ஆஸ்திரேலியாவின் கையும் ஓங்கியே இருக்கிறது.

தற்போது நடைபெற்றுவரும் பாலஸ்தீன – இஸ்ரேல் போரில் ஆஸ்திரேலியாவின் அனுகுமுறை கேள்விக்குறியாகவே உள்ளது. இனப்படுகொலைக்கெதிரான – சர்வதேச சட்டத்தை கடைப்பிடிக்கவேண்டிய உறுதிப்பாடான நிலைப்பாட்டை ஆஸ்திரேலிய அரசு இன்றும் வலுவாக நடைமுறைப்படுத்த வில்லை. மாறாக பாலஸ்தீன அகதிகளை திரும்பிசெல்லக் கோருகின்றது ஆஸி அரசு. உக்ரைன் அகதிகள் மீது காட்டும் மனிதாபிமானத்தை ஆஸ்திரேலியா பாலஸ்தீன அகதிகள் மீது காட்டவில்லை என்பதே நிதர்சனம். அகதிகள் விடயத்தில் ஆஸ்திரேலியாவின் இரட்டை முகத்தை இவ்வாறான சம்பவங்கள் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

அகதிகள் வருவதற்கான அடிப்படைக் கூறுகளைக் களை வதை விடுத்து மேற்குலக நாடுகள் அகதிகள் வருவதை தடுப்பதற்காக அகதிகளாக்கும் நாடுகளிடமே கோரிக்கை விடுவது மட்டுமின்றி அந்த நாடுகளுக்கு இராணுவத் தள பாடங்களை வழங்குதல் – உளவுத்தகவல்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை தாராளமாகச் செய்கின்றன.

குறிப்பாக ஆஸ்திரேலியாவில் ஆட்சிப்பீடமேறும் இரு அரசுகளும் இலங்கை அரசுக்கு மாறி மாறி இராணுவத் தளபாடங்களை வழங்கியுள்ளன. மன்னாரில் ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸாரின் காவல் நிலையம் ஒன்று உருவாக் கபட்டதும் அறிந்ததே. அகதிகள் உருவாவதற்கான அடிப்படைக் காரணங்களை களைவதை விடுத்து மென்மேலும் அகதிகளை நசுக்குவதற்கான திட்டங்களையே கை வலுப்பெற்ற நாடுகள் செய்கின்றன.

போர்,இனம், மதம், தேசியம் , தனிப்பட்ட அரசியல் கருத்து, சமூகக் குழு ஒன்றில் அங்கம் வகித்தல் போன்ற காரணங்களால் தங்களது உயிருக்கு அச்சுறுத்தல் ,அதனால் நாடு திரும்ப முடியாது என அடையாளம் காணப்படுவோர் அகதிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். அதுமட்டுமின்றி ஒரு குடும்பத்தில் கணவர் அல்லது மனைவி அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவர்களுடைய குடும்பங்களை பிரித்து, அகதி என்பதை நிரூபிக்கத் தவறியவரை நாடு கடத்தக் கூடாது என்று ஐ.நா. அகதிகளுக்கான வரையறை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இதையெல்லாம் ஆஸ்திரேலிய அரசு கடைப்பிடிக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை என்றே கூறவேண்டும்.

தற்போதும் படகுவழி அகதிகள் வருகின்றனர்: அவர்களை நடுக்கடலிலேயே வைத்து கணக்கு முடித்து வந்தவழி அனுப்பிவிடுகிறது ஆஸி அரசு. தம் சொந்த நிலத்தில் வாழ முடியாமல், உயிரைக் கையில் பிடித்து வருவோரை ஒரு மனிதாபிமானமுள்ள அரசு இப்படி நடுக்கடலில் திருப்பி அனுப்புமா? இனியாவது ஆஸ்திரேலிய அரசு , அகதிகள் விடயத்தில் தன் நிலைப்பாட்டை சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலிய நிலப்பரப்பில் மட்டும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் குடும்பங்களை பிரிந்து நீண்ட காலமாக நடைப் பிணங்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கான நிரந்தரவதிவிட உரிமைக்கான நடவடிக்கையை அரசு செய்யவேண்டும் என்பதை எதிரொலி வலியுறுத்துகிறது.

# குடியுரிமை பெறவருவோருக்கு வழிகாட்டி வகுப்புகள்

ஆஸ்திரேலியக் குடியுரிமை பெறுவதற்கான வழி காட்டல் வகுப்புகளை Southern Migrant and Refugee Centre ஆரம்பித்து வைத்துள்ளது.

மெல்பேர்ணின் தென்கிழக்கு பிராந்தியத்தில் அமைந்திருக்கும் குடிவருவோர் ஆதரவு நிலையம் **1993**ஆம் ஆண்டு ஒரு சிறிய அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டு இன்று **70** முழு நேர உத்தியோகத்தர் களையும் தற்காலிக ஊழியர்களையும் நூற்றுக்கணக் கான தொண்டர்களையும் கொண்டு இயங்கி வருகின் றது. இதன் தலைமைக்காரியாலயம் 39 Clow Street, Dandenong Victoria 3175 உள்ள முன்னாள் மாநகர சபை காரியாலயத்தில் அமைந்துள்ளது. இந்த அமைப் பின் மூலம் ஆயிரக்கணக்கான பல்லின சமூகத்தவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு குடியேறும் போது தேவைப்படும் உதவிகளை வழங்கி வருகின்றது. இந் நிறுவனமே ஆஸ் திரேலிய குடியுரிமை பெறுவதற்கான வழிகாட்டி வகுப்புகளை ஆரம்பித்துவைத்துள்ளது.

இந்நிகழ்வு கடந்த மாதம் **20** ஆம் திகதி Narre Warren, Bunjil Placeஇல் உள்ள பொது நூலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹஸேண்டிர பெணர்டோ Southern Migrant and Refugee Centre இன் உப தலைவர் விக்கி விக்கிரம சிங்கம், உதவிச் செயலாளர் திலீபன் அமிர்தலிங்கம் பிரதம நிறைவேற்று அதிகாரி சர்மா மற்றும் நிலையத்தின் உறுப்பினர்கள், பல்லின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.







இந்த ஆண்டின் முற்பகுதியில் இந்த வகுப்புகளுக் கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. பரீட்சார்த்த முயற்சியின் வெற்றியின் பின் னர் Southern Migrant and Refugee Centre இன் உப தலைவர் விக்கிரம சிங்கத்தின் தலைமையில் நாடாளு மன்ற உறுப்பினர் ஹஸேண்டிர பெணர்டோவினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

வாராந்தம் பகல் **12** மணி முதல் **1** மணி வரையும் இவ் வகுப்புக்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து உரையாற்றிய ஹஸேண்டிர பெணர்டோ, இந்த வகுப் புகள் குடியுரிமை பரீட்சையில் வெற்றி பெறுவதற் கானது மட்டுமல்ல ஆஸ்திரேலியாவின் குடிமக்களாக மாறுவதற்கான நம்பிக்கையையும் ஆதரவையும் வழங்குகின் றது எனத் தெரிவித்ததோடு, தனது பெற்றோர் குடியு ரிமை பெறுவதில் எதிர்கொண்ட சவால்கள் குறித்தும் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய Southern Migrant and Refugee Centre உப தலைவரும் இந்நிறுவனத்தை ஆரம் பிப்பதற்கு முன்னோடியாக உழைத்தவரும் ஸ்தாபக உறுப்பினருமான விக்கி விக்கிரம சிங்கம், 'குடிபெயர்ந்து இங்கு வந்து நிரந்தர வதிவுடைமை பெற்ற பின்னர் ஆஸ்திரேலியக் குடியுரிமை பெற விண்ணப்பித்தவர்கள் கட்டாயமாகப் பரீட்சையில் தோற்ற வேண்டும். குடி வருவோர் மத்தியில் இந்தப் பரீட்சையில் தோற்றுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு காரணம் தகுந்த பயிற்சி இன்மை. இதனை ஆய்வு செய்து ஆஸ் திரேலிய குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்தவர் களை அழைத்து பரீட்சைக்கு தோற்றுவதற்கு பயிற்சி யளித்து வருகின்றது. குறிப்பாக ஒரு விண்ணப்ப தாரர் *3* முறை பரீட்சையில் தோல்வியுற்றால் மீண்டும் குடியுரிமை பெறுவதற்காக புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படும். இன்றைய சூழ் நிலையில் ஆஸ்திரேலிய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க விண்ணப்பக் கட்டணமாக **495** டொலரைச் செலுத்த வேண்டும். குடியுரிமை பெறுவோருக்கு இவ்வகுப்புகள் உதவியாக இருக்கும். இந்த வகுப்புகளில் ஆங்கில அறிவு குறைந்தவர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். வகுப்புகள் இலவசமாகவே நடபெறுகின் றன. முன்கூட்டியே வகுப்புகளுக்கு பதிவுசெய்யவேண் டும் 'என்று தெரிவித்தார்.





## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# உலகை அதிரவைத்த தியனன்மென் சதுக்க படுகொலை!

## சீன மாணவர்களின் போராட்டத்தை அடக்கிய கொடூரம்

**தனி ஒரு போராட்டக்காரர் டாங்கி வரிசையை மறித்து நிற்பதைக்காட்டும் காட்சி அது. 20ஆம் நூற்றாண்டின் ஒரு முக்கியமான புகைப்படமாகவும் இது கருதப்படுகிறது. சீனத் தலைநகர் பெய்ஜிங் தியனன்மென் சதுக்கத்தில் 35 ஆண்டுகளுக்கு முன் பெரும் போராட்டத்தின் படுகொலை களத்தின் வரலாற்றை என்றும் நினைவுபடுத்தும் ஒரு முக்கிய புகைப்படமாகும்**



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

சீனாவில் 1989 மே இறுதி நாட்களில் ஜனநாயக உரிமை கேட்டுப் போராடிய மாணவர்கள் ஏராளமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட இடம் தான் தியனன்மென் சதுக்கம் (Tiananmen Square) ஆகும்.

**1989 தியனன்மென் சதுக்கப் போராட்டம் :**

தியனன்மென் என்ற பெயரை உலகம் இன்னும் அதிர்ச்சியோடு நினைவுகூர்வதற்கு இந்தப் போராட்டமும், அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு சீன அரசு கையாண்ட வழிமுறைகளால் எண்ணற்றவர்கள் கொல்லப்பட்டதும்தான் காரணம்.

சீனாவின் தியனன்மென் சதுக்கப் படுகொலை வரலாற்றில் உலகை அதிரவைத்த படுகொலையாக இன்னமும் கருதப்படுகிறது. இந்த தியனன்மென் சதுக்கத்தை சீனாவில் சொர்க்கத்தின் அமைதியின் வாயில் என்றும் அழைப்பர்.

சீனத் தலைநகரம் பீஜிங்கின் நடுப்பகுதியில் அமைந்துள்ள தியனன்மென் சதுக்கம் 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்தச்சதுக்கம் உலகில் மிகப்பெரிய நகர்ப்புற சதுக்கமாகவும் சீனப் பண்பாட்டில் ஒரு முக்கியமான இடமாகவும் உள்ளது.

1989இல் சீனாவின் தலைநகரம் பீஜிங்கில், தியனன்மென் சதுக்கத்தில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்துக்கு சீனத் தொழிலாளர்களும், கல்லூரி மாணவர்களும் தலைமை தாங்கினர். 1989இல் ஏப்ரல் 15 முதல் ஜூன் 4 வரை இப் போராட்டம் நடந்தது.

**மாணவர் போராட்டம் எப்படி உருவாகியது?**

1989 ஆண்டில் மேம்பட்ட அரசியல் உரிமைகள் கோரி போராட்ட மேகம் மாணவர் மத்தியில் எழுந்தது. அத்துடன் முக்கியமான அரசியல் தலைவரும், பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஆதரித்தவருமான ஹூயோபாங்கின் இறப்பு போராட்டக்காரர்களைத் தூண்டியது.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் எதிரிகளால் கட்சியின் உயர் பதவியிலிருந்து அவர் ஏற்கனவே நீக்கப்பட்டிருந்தார். 1989 ஏப்ரல் மாதம் ஹூவின் இறுதிச் சடங்கின்போது ஆயிரக்கணக்கானோர் கூடினர். அவர்கள் சீனாவில் பேச்சுரிமை கோரினர். கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் வலியுறுத்தினர்.

அதற்கு அடுத்த வாரம் போராட்டக்காரர்கள் தியனென்மென் சதுக்கத்தில் கூடினர். இந்தப் போராட்டத்தில் சுமார் 10 லட்சம் பேர் வரை கூடியதாகக் கணிக்கப்படுகிறது. முதலில் அரசாங்கம் போராட்டக்காரர்களுக்கு எதிராக எந்தவொரு நேரடி நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

எவ்வாறு எதிர்வினையாற்றுவது என்பதில் சீன அரசுக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. சிலர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். சிலர் பெரிதாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வேண்டாம் என்றனர்.

சீனப் பொதுவுடமைக் கட்சியின் (CPP) பொருளாதாரக் கொள்கைகளுக்கும் அரசியல் கொள்கைகளுக்கும் எதிராக மாணவர்கள் போராட்டம் செய்தனர். பீஜிங்கில் தியனன்மென் சதுக்கத்தில் முக்கியமான போராட்டங்கள் நடந்தன. ஆனாலும் சாங்காய் போன்ற பல்வேறு சீன நகரங்களிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தன.

பீஜிங்கில் இந்த அறவழியில் நடந்த போராட்டம் மீது சீன இராணுவம் தாக்குதல் நடத்தியதில் பலரும் உயிரிழந்தனர், மேலும் பலர் காயமடைந்தனர். இந்த வன்முறைக்கு பிறகு சீன அரசு பலரைக் கைது செய்ததுடன், வெளிநாட்டு செய்தி ஊடகங்களை தடையும் செய்தது. சீன அரசு செய்த வன்முறையையும் ஊடகங்கள் மீதான தடையையும் பல்வேறு நாடுகள் அப்போது கண்டித்தன.

**டாங்கிகளை எதிர்த்த நபரின் புகழ்பெற்ற புகைப்படம் :**

இறுதியில் கடும்போக்காளர்கள் வென்றனர். பெய்ஜிங்கில் மே மாத இறுதியில் பாதுகாப்பு சட்டம் அமுலுக்கு வந்தது. ஜூன் 3 மற்றும் 4ஆம் திகதிகளில் தியனன்மென் சதுக்கத்தை நோக்கி அரச படைகள் சென்றன. அந்தப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர படையினர் துப்பாக்கிச் சூடு நடாத்தி போராட்டக்காரர்களை கைது செய்தனர்.

ஜூன் மாதம் 5ஆம் திகதி, சதுக்கத்தில் இருந்து வெளியேறிய ராணுவ டாங்கி வரிசைமுன், இரண்டு கைப்பைகளை வைத்து கொண்டு சாமானியராகத் தோன்றிய ஒரு மனிதர் மறித்துக்கொண்டு நின்றார். அதன்பின் அவர் இரண்டு படையினரால் இழுத்துத் தள்ளப்பட்டார். அந்த நபருக்கு பிறகு என்ன ஆனது என்பது தெரியவில்லை.

ஆனால் அந்தக் காட்சியைப் பதிவு செய்த புகைப்படம், அந்தப் போராட்டத்தின் அடையாளமாக டாங்கிகளை எதிர்த்த மனிதரின் படமாக மாறியது.


**போராட்டத்தில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை?**

இந்தப் போரட்டத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. முதலில் 200 பொதுமக்களும், பாதுகாப்பு படையை சேர்ந்த சில டஜன் பேரும் உயிரிழந்ததாக சீன அரசு 1989ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் தெரிவித்தது.

ஆனால், நூற்றுக் கணக்கானோர் முதல், பல்லாயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று வெவ்வேறு கணிப்புகள் வெளியாயின. சீனாவுக்கான பிரிட்டனின் தூதர் அகன் டொனால்ட் அனுப்பிய தகவல் பரிமாற்றம் ஒன்றில், இந்த சம்பவத்தில் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டிருந்தது.

சீன மக்களுக்கு இங்கு என்ன நடந்தது என்பது முழுமையாக தெரியுமா என்பதும் ஐயமே. அத்துடன் தியனன்மென் சதுக்கத்தில் என்ன நடந்தது என்பது சீனாவில் அதிகம் பேசப்படக் கூடிய ஒரு விஷயமன்று. இப்படுகொலை தொடர்பான இணையப் பதிவுகள் அரசால் உடனுக்குடன் நீக்கப்பட்டுவிடும்.

தற்போதைய தலைமுறையினருக்கு தியனன்மென் சதுக்கம் குறித்து அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் போராட்டம் நடந்தபோது பிறந்திருக்காத இன்றைய தலைமுறையினருக்கு இப்படுகொலை பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதும் உண்மையே.



# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# தமிழர்கள் ஒன்றிணைவதை இந்தியா விரும்பாது!

## இளைய தலைமுறையை நேர்கோட்டுக்கு கொண்டுவர பொதுவேட்பாளர் விடயம் உதவும்!

## தமிழ்த்தேசிய அரசியலில் சூழலியலும் பேசப்பட்ட வேண்டும்

**தமிழ்த் தேசிய அரசியலில் சூழலியல் சார்ந்த செயற்பாடுகளுடன் இடைவிடாமல் கடந்த சில தசாப்தங்களாக இயங்கி வருபவர் சூழலியலாளர் ஐங்கரநேசன். வடக்குமாகாண சபையில் அமைச்சராகவும் பதவி வகித்தவர். அவர் எதிரொலிக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இது.**

**நேர்கண்டவர்: ஜெரா**



**கேள்வி: தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த புரிதல் எவ்வளவு ஆழத்துக்கு உண்டு?**

**பதில்:** சுற்றுச்சூழல் பற்றிய புரிதல் மிகப்பலவீனமான நிலையில் இருப்பதாகவே நான் கருதுகின்றேன். ஏனெனில் எமது தமிழ்த்தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் - இன்றைய களச்சூழலில் தேசியம் என்பது வெறும் கோசமாகத்தான் முன்வைக்கப்படுகின்றது. அதாவது தமிழ்த் தேசியம் என்ற சொல்லை உச்சரிப்பதானது, வாக்குகளை அள்ளியெடுப்பதற்கான மந்திர உச்சாடனமாக மாற்றப்பட்டிருக்கின்றது. தேசியத்தின் உட்கூறுகளை யாருமே கருத்தில் எடுப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாம் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் பற்றி கதைக்கின்றோம். மண்மீட்புப் போராட்டம் என்கின்றோம். எனவே மண் என்றால் என்ன என்பதையும் அறிந்திருக்க வேண்டும். மண் என்பது எமது சூழலையும் இணைத்ததுதான். வெறுமனே நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் என்றால் நாங்கள் அனைவரும் முன்னிற்போம். ஆனால் அதுதொடர்பான ஆழமான புரிதல் எம்மிடம் இருப்பதில்லை.

உண்மையில் இதற்கு முன்பான காலங்களில் சூழல் என்பது ஒரு சூழலியல் என்கிற பாடமாக மட்டுமே பார்க்கப்பட்டது. ஆனால் இன்று அப்படியல்ல. சூழலியல் என்பது சூழலியம் என்கிற கோட்பாட்டை நோக்கி நகர்ந்துவிட்டது. கம்யூனிசம், சோசலிசம், பெரியாரியம் என ஆட்சிறைக் கோட்பாடுகளைப் போல சூழலியமும் ஒரு கோட்பாடு. எனவே தேசியத்திலிருந்து பிரிக்கமுடியாத அல்லது பிரிக்கக்கூடாத ஒரு உட்கூறாகத்தான் சூழலியம் என்கிற கோட்பாட்டைப் பார்க்கின்றோம். ஆனால் இந்தக் கருத்துநிலையோடு தமிழ்த் தேசியத்தைப் பார்க்கின்ற நிலை இன்றைய தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் இல்லை. அது வருந்தத்தக்கது. ஆனால் நாம் இதன் தொடக்கப்புள்ளியாக இருக்கின்றோம். இது தொடர்பான அதிர்வை ஏனைய அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்படுத்திவருகின்றோம். நாங்கள் இந்த விடயத்தைப் பேசுகின்றபோது, அவர்களும் இதனை நோக்கித் தள்ளப்படுவார்கள் என்று நம்புகின்றேன்.

சமநேரத்தில் தமிழ் மக்களிடம் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு அதிகரித்திருக்கின்றது. எங்களுடைய சுற்றுச்சூழல் தொடர்பான பரப்புரைகள், கருத்துகள் இளைஞர்கள் பலரை இதில் நாட்டங்கொள்ள வைத்திருக்கின்றன. ஆனால் அவர்களுடைய செயற்பாடுகள் கூட மரங்களை நடுதல், சுற்றாடலைச் சுத்தப்படுத்தல் என்பவற்றோடுதான் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. உண்மையில் சுற்றுச்சூழல் பற்றிய ஆழமான புரிதல் ஏற்படவேண்டும். தமிழ்த் தேசிய அரசியலில் சூழலியம் மிக முக்கியமான உட்கூறாக - தமிழ்த் தேசியத்திற்கு ஏற்படும் ஆபத்துகளின் பிரதான மையமாக மாறிவருவதை அனைவரும் புரிந்துகொள்வார்கள் என நம்புகின்றேன்.

**கேள்வி: வெறுமனே சுற்றுச்சூழல் குறித்த அரசியலை மட்டுமே முன்னெடுத்தால், வெகுசன அரசியலைக் கவரமுடியுமா?**

**பதில்:** இல்லை. இன்றிருக்கும் தமிழ்த்தேசிய அரசியலென்பது வாக்குவங்கிகளைப் பிரதானமாகக் கொண்டது. ஆயுதப் போராட்ட மௌனிப்பிற்குப் பிறகு தமிழ்த் தேசிய அரசியல் போராட்டத்தை எடுத்துச்செல்லவேண்டியவர்கள்கூட வெறுமனே வாக்குப்பொறுக்கி அரசியல்வாதிகளாகத்தான் இருக்கிறார்கள். எனவே அவர்கள் பேசுகின்ற விடயங்கள் ஊடகங்களில் அதிக கவனத்தைப் பெறுகின்றன. ஒரு வெகுசன அபிப்பிராயமும் அதனை நோக்கித்தான் திருப்பப்படுகின்றது. அதேவேளை சூழலியம் குறித்த விடயத்தை தமிழ்த் தேசிய அரசியலோடு கலந்துபேசுகையில் அதுவும் கவனம் பெறுகின்றது. ஆனால் அது மட்டுமே எங்களை வெகுசன மக்களிடம் கொண்டுசேர்க்கும் என நாம் கருதவில்லை. அதற்காக நாம் சூழல் சார்ந்த பிரச்சினைகளைத் தவிர்த்துவிட்டுச்செல்லவும் தயாரில்லை. நாங்கள் சூழல்சார்ந்த பிரச்சினையொன்றை பார்ப்பதற்கும், வெகுசன மக்கள் அதனைப் பார்ப்பதற்கும் வித்தியாசங்கள் இருக்கலாம். நாங்கள் எமது வாக்குகளை இழக்கப்போகின்றோம் என்பதற்காக அந்த விடயங்களைப் பேசாதிருக்க முடியாது. சுற்றுச்சூழலை மையப்படுத்தி மாத்திரமே தமிழ் தேசிய அரசியலை முன்னெடுப்பது கடினமானதொன்று. எங்களுக்குத் தேர்தல் மாத்திரமே இலக்கு அல்ல. அரசியலில் சூழலியம் பேசுபொருளாக மாறவேண்டும் என்பதே எங்களின் பிரதான இலக்கு. நாங்கள் அதனைச் செய்துவருகின்றோம் என்றே நான் கருதுகின்றேன்.

**கேள்வி: தமிழர் தாயகத்தில் இராணுவம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பல்வேறு அபகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இத்திணைக்களங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின்போது, இதுவரைகாலமும் தமிழர்கள் பாதுகாத்து வந்த சுற்றுச்சூழல் எவ்வாறான வகையில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது?**

**பதில்:** வடக்கு, கிழக்கில் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது தமிழர்களின் பெருமளவான காணிகள் இராணுவத்திடம் இருந்தன. பாதுகாப்பு என்ற போர்வையில் தங்களின் முகாம்களை விரிவுபடுத்துவதற்குத் தமிழர்களின் நிலத்தை அபகரித்திருந்தனர். எமது மக்கள் உள்ளூரிலேயே ஏதிலிகளாக்கப்பட்டனர். அதேபோல கடல் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கித் தமிழ் மீனவர்கள் இறங்குவதற்குக்கூடத் தடைவிதித்திருந்தனர். 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர், இவ்வாறு இராணுவம் அபகரித்துள்ள நிலங்களை மீட்பதற்கான போராட்டங்கள் ஆரம்பித்தன. பொதுமக்களின் நிலங்களை விடுவிக்குமாறு சர்வதேச நாடுகளின் அழுத்தங்களும் அதிகரித்தன. எனவே விரும்பியோ விரும்பாமலோ அபகரித்த நிலங்களை கொஞ்சம் கொஞ்சமாகவாவது விடுவிக்கவேண்டிய கட்டாயத்திற்குள் இலங்கை அரசு தள்ளப்பட்டது. இவ்வாறு அழுத்தங்களின் காரணமாக விடுவிக்கப்பட்ட நிலத்தைக் கூட, அரசு தனக்கு சாதகமான பரப்புரைக்கே பயன்படுத்திவருகின்றது. அபகரிக்கப்பட்ட காணிகளை மீள வழங்குவதைப் பெரும் பரப்புரையாகச் செய்கின்றனர். காணி விடுவிப்பிற்காகத் தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் அரசியல்வாதிகள் பற்றிய செய்திகள், அவர்கள் அரசியல் வரலாற்றின் பெருஞ்சாதனைகள் போல அறிக்கையிடப்படுகின்றன.

ஆனால் 2009 இற்குப் பின்னர் கண்ணுக்குத் தெரியாத இன்னொரு யுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது. நாங்கள் அதனைப் “பச்சை யுத்தம்” என அழைக்கின்றோம். அதாவது யுத்தத்திற்கு இன்னொரு வகையான முகம் இருக்கின்றது. முன்னர் இராணுவத்தினர் ஆயுதம்கொண்டு, உயிர்ப்பலியெடுத்து நடத்திய யுத்தமானது, தமிழர்களின் நிலத்தை அபகரித்தது. இப்போதும் அதே வேலைதான் இடம்பெறுகின்றது. வனப்பாதுகாப்பு, மரபுரிமைப் பாதுகாப்பு, பறவைகள், விலங்குகளின் பாதுகாப்புக்காக சரணாலயங்கள் அமைத்தல் எனப் பல்வேறுபட்ட நடவடிக்கைகளின் பெயரில் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. உண்மையில் இராணுவத்தினர் முகாம் அமைப்பதற்கும், அவர்களது பிற தேவைகளுக்கும் அபகரித்த நிலத்தின் அளவையும் பார்க்க, தொல்லியல் திணைக்களமும், வனவளத்திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையும் அபகரித்த நிலத்தின் அளவு பன்மடங்கு அதிகம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இராணுவத்திடம் இருந்த காணிகள் இன்று திணைக்களங்களிடம் கைமாற்றப்பட்டிருக்கின்றன. எங்களது நிலம் அபகரிக்கப்படுகின்றது என நாம் கூக்குரலிட்டுப் போராடினாலும், அது சர்வதேச ரீதியில் எடுபடாது. வனவளத்தைப் பாதுகாப்பதற்கான அரச நடவடிக்கை என சர்வதேசத்திடம் காட்டி, அபகரிப்பு நடவடிக்கைக்கும் அரசு நற்பெயர் பெற்றுக்கொள்கின்றது. மிக நாசூக்காக இந்த நில அபகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இதனை சூழலியல் ஏகாதிபத்தியமாகத்தான் நான் பார்க்கின்றேன்.

உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம் இயக்கச்சி பகுதியில் உள்ளது. சரணாலயம் என்று குறிப்பிட்டால், அது பொதுமக்களின் நடமாட்டத்திற்கு எவ்வித இடையூறையும் ஏற்படுத்தாது. சுற்றுச்சூழலுக்கும் அங்கு வரும் பறவைகளுக்கும் இடையூறு ஏற்படுத்தாத வகையில் அப்பகுதியில் குடிமகன் வசிக்கலாம். ஆனால் இதையெல்லாம் தடுக்கின்ற வகையில் சரணாலயங்கள் தேசிய பூங்காக்களாக தரமுயர்த்தப்படுகின்றன. இயற்கை ஒதுக்கிடமாகப் பிரகடனம்செய்யப்படுகின்றன. தேசிய பூங்காவானாலும் சரி, இயற்கை ஒதுக்கிடமாக பிரகடனம்செய்யப்பட்டாலும் சரி அந்நிலத்திலிருந்து மக்கள் அந்நியப்படுத்தப்படுகின்றனர். எங்களுடைய நிலங்கள் பிடுங்கப்பட்டுத்தான், இவ்வாறு மாற்றப்படுகின்றன. இதையேதான் பாலஸ்தீனியர்களின் நிலத்தில் இஸ்ரேலும் செய்தது. பாலஸ்தீனத்திலும் தேசியப் பூங்காக்களை நிறுவித்தான் அங்கிருந்த பாலஸ்தீனியர்களை அகற்றினார்கள். அதேபோன்றதொரு திட்டம்தான் இங்கேயும் நிகழுகின்றது. இந்த அபகரிப்புக்கள் குறித்த பிரக்ஞை எங்களிடமில்லாது போனால் பாலஸ்தீனியர்களுக்கு நடந்தநிலைதான் எங்களுக்கும் ஏற்படும்.

**(10ஆம் பக்கம் பார்க்க)**

# தமிழர்கள் ஒன்றிணைவதை இந்தியா விரும்பாது!

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி: யுத்தத்திற்குப் பின்னர் பல்தேசிய நிறுவனங்களது வளச்சுரண்டல்கள் வடக்கு, கிழக்கில் அதிகரித்திருக்கின்றன. அதானி குழுமத்தின் காற்றாலை அபகரிப்பு மற்றும் கனியமணல் சுரண்டல் ஆகியவற்றுக்கு எதிராக மன்னாரில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இது குறித்து உங்களின் பார்வை என்ன?**

**பதில்:** இன்று உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான பிரச்சினை காலநிலை மாற்றம். இந்தக் காலநிலை மாற்றத்திற்கு மிக முக்கியமான காரணம் பெற்றோலியப் பொருட்களின் மிதமிஞ்சிய பாவனைதான். அனைத்து நாடுகளுமே பெற்றோலியப் பாவனையை மட்டுப்படுத்த வேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே பெற்றோலிய பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அதற்கு மாற்றுத்திட்டங்களைக் கொண்டுவரவேண்டும். அதற்கு மிகப்பொருத்தமானது மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களைப் பயன்படுத்துவதுதான். அவ்வாறு இன்றிருக்கும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி காற்றுத்தான். ஆகவே காற்று மின்வலுவை அல்லது காற்று மின்சக்தியைப் பெறுவதற்கு அனைத்து நாடுகளுமே முதலீடுசெய்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியான காற்றுமின்வலுவைப் பெறவேண்டிய தேவை இருக்கின்றது. இந்நாட்டிடம் எரிபொருள் வளமுமில்லை. எரிபொருள் வளமின்மை காரணமாகப் பெரிதும் நீர்மின்சக்தியையே நம்பியிருக்கவேண்டிய தேவையுள்ளது. ஆகவே நீர்மின் சக்திக்கு அடுத்ததாக இருப்பது காற்றுத்தான். இங்கே பிரச்சினை அதானி குழுமம்தான். இலங்கை அரசாங்கம் சீனச்சார்பை எடுத்தமையால், பிராந்திய வல்லரசும் உள்ளே வருகின்றது. பல்தேசிய நிறுவனங்கள் வெறுமனே வணிக நிறுவனங்கள் மட்டுமல்ல. அவை வணிக நோக்குடன் மட்டும் செயற்படுபவையுமல்ல. அனைத்துப் பல்தேசிய நிறுவனங்களும் தம் சொந்த நாடுகளின் அரசுகளோடும், அரசாங்கங்களோடும், அரசியல் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பினைப் பேணும். இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் தாம் முதலீடு செய்யும் நாட்டில் ஈட்டும் பணத்தைத் தம் சொந்த நாட்டின் கருவூலத்திற்கு கொண்டு செல்வதையே நோக்கமாகக் கொள்ளும். அதானியாக இருந்தாலும், வேறு ஏதாவது பல்தேசிய நிறுவனமாக இருந்தாலும் இதுதுான் பொதுநியதி. சுற்றுச்சூழல் பற்றிய மதிப்பீடுகள், மன்னாரில் காற்றாலை மின்வலு நிலையம் அமைப்பதற்குப் பொருத்தமற்றவை என்றே சொல்கின்றது. என்னிடம் கேட்டால், காற்றாலை மின்வலு நிலையம் வேண்டாம் என்று சொல்லமாட்டேன். ஏனென்றால் பெற்றோலிய சக்திக்கு மாற்றீடாக மின்சாரத்தைப் பெறுவதற்கு வேறு வழியில்லை. மின்சாரம் வேண்டாம் என்றும் யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் அந்த இடம் பொருத்தமற்றது என சுற்றுச்சூழல் அறிக்கைகள் சொல்லுவதனால், அந்தத் திட்டம் வேறிடங்களுக்கு மாற்றப்படல் வேண்டும். அல்லது நிறுத்தப்படல் வேண்டும்.

இவ்விடத்தில் நான் வேறொரு விடயத்தையும் பகிர விரும்புகின்றேன். பன்னாட்டு நிறுவனங்கள் இன்னொரு நாட்டில் முதலீடுகளைச் செய்கின்றபோது, வணிக நிறுவனங்களுக்கான சமூகக் கடப்பாடு (Corporate Social Responsibility) என்கிற விடயம் கைக்கொள்ளப்படுவதுண்டு. அதனைச் சுருக்கமாக சி.எஸ்.ஆர் என்பார்கள். அது பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமான கடப்பாடு கிடையாது. அனைத்து நிறுவனங்களுக்கும் அந்தக் கடப்பாடு பொதுவானது. வட மாகாணசபை ஆட்சியிலிருந்தபோது பளையில் உள்நாட்டு நிறுவனமொன்று காற்றாலை மின்சக்தி நிலையத்தை அமைத்தது. அந்நிறுவனத்திடமிருந்து வருடத்திற்கு 20 மில்லியன் ரூபாவை வடமாகாணசபை சி.எஸ்.ஆர் ஆகப் பெற்றிருந்தது. ஆனால் எங்கள் தமிழ் அரசியல்வாதிகளிடம் சி.எஸ்.ஆர் என்றால் என்னவென்று புரியாத நிலை காணப்படுகின்றது. அப்போது இதனை விளங்கிக்கொள்ளாத தமிழ் அரசியல்வாதிகள், குறித்த காற்றாலை நிறுவனத்திடமிருந்து இன்னும் அதிக பணம் பெற்றிருக்கலாம் என விமர்சித்தனர். அது சாத்தியமற்றது. அந்நிறுவனத்திற்கு அரசாங்கம் நிலத்தை வழங்குகின்றது. நில அதிகாரம் மாகாணசபைக்கு இல்லை. மாகாண சபையினராகிய எம்மிடம் ஒப்புதல்தான் இருக்கின்றது. எனவே வன்நுகர்ச்சியாக இருப்பினும், எங்களின் சம்மதமில்லாமல் அதனைச் செய்துவிட்டுப்போகலாம். ஆகவே அந்தக் காற்றாலை மின்சக்தி நிறுவனம் பிரதேச செயலகத்தின் அனுமதியைப் பெற்று அந்த நிலத்தை எடுத்துக்கொண்டார்கள். அந்நிறுவனம் மாகாணசபையிடம் ஒரு ஒப்புதலுக்காகவே வந்தது. மாகாணசபைக்கு இருக்கின்ற அதிகாரத்தை மீறியே மாகாண சபைக்கு சி.எஸ்.ஆர் கேட்டிருந்தோம். அதற்கான நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருந்தது.

மாகா (MAGA) இலங்கையின் மிகப்பெரிய வணிக நிறுவனம். ராஜபக்ச குடும்பத்தினர் பரப்புரைப்படுத்தும் கார்ப்பெற் வீதிகளை நாடெங்கும் அமைத்தது குறித்த நிறுவனம்தான். அதற்காக அவர்கள் கருங்கல்லினைப் பெறுவதற்கு முல்லைத்தீவில் இருந்த கருங்கற்பாறைகள் உடைக்கப்பட்டன. அவற்றை நாம் சென்று பார்த்தபோது, அனைத்துமே படுகுழிகளாகத்தான் காட்சியளித்தன. உண்மையில் குறித்த ஒப்பந்தத்தின்படி, மாகா நிறுவனம் அந்தப் பாரிய குழிகளை நிரவவேண்டும். அவ்விடத்தில் மீள்மரநடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த அகழ்வினால் அயற்கிராமங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமாக இருந்தால், அதற்குரிய பதிலீடுகளை குறித்த நிறுவனம் செய்யவேண்டும். ஆனால் நாம் மாகா நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை சந்தித்து, இது குறித்து கேள்வியெழுப்பியபோது, சி.எஸ்.ஆர் பணமெல்லாம் முடிந்துவிட்டது என்றார்கள். என்ன செய்தீர்கள் எனக் கேட்டால், வன்னியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களின் வேலிகள், வரவேற்பு வளைவுகள் எல்லாம் கருங்கற் பாறைகளில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த கருங்கற் பாறைகளைத் தாமே சி.எஸ்.ஆர் ஆக வழங்கியதாகவும் பதிலுரைத்தார்கள். அப்போதிருந்த ஆளுநர் சரத் சந்திரசிறியின் ஆலோசனையின் பேரில்தான் இதுநடந்தது. மாகாண சபையினராக அதனை நாம் ஏற்கத்தயாராக இருக்கவில்லை. எனவேதான், எமது அதிகாரத்தை மீறி பளையில் அமைக்கப்பட்ட காற்றாலை நிறுவனத்தின் சி.எஸ்.ஆர் ஐ வடமாகாண சபைக்கு வழங்கும்படி கேட்டிருந்தோம். ஆளுநருடன் கடுமையாகப் போராடி ஈற்றில் நாம் வென்றோம்.

ஆனால் துயரம் என்னவெனில், அதே நிறுவனம் வவுனியாவில் தனது திட்டங்களை ஆரம்பித்தபோது, எங்களிடம் ஒப்புதலுக்கு கேட்டனர். ஆண்டுதோறும் 10 மில்லியன் ரூபாயை சி.எஸ்.ஆர் ஆக மாகாண சபைக்குத் தருவதாக ஒப்புதலளித்தனர். ஆனால் இந்த சி.எஸ்.ஆர் குறித்து விளக்கமற்ற தமிழ் அரசியல்வாதிகள் அதனைத் தரவே தேவையில்லை என முடிவெடுத்தனர். இதனால், அந்த நிறுவனம் மட்டுமல்ல, அதற்குப் பிறகு வந்த ஏனைய நிறுவனங்களும் சி.எஸ்.ஆர் என்ற விடயத்தையே கவனத்தில் எடுக்கத்தவறின. ஆகவே அதானியாக இருக்கலாம், வேறு எந்த நிறுவனமாகவும் இருக்கலாம், இந்த நிலத்தின் வளங்களைப் பயன்படுத்தத்தொடங்கினால் இந்த மாகாணத்துக்குரிய சி.எஸ்.ஆர் ஐ வழங்கவேண்டும். ஆனால் அது குறித்து யாரும் வாயே திறக்கவில்லை.

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் என்றுமில்லாத வகையில் கடலட்டைப் பண்ணைகள் முளைத்திருக்கின்றனவே?**

**பதில்:** உலகத்தில் தான் சாப்பிடாத ஓர் உணவை அதிகளவில் உற்பத்திசெய்யும் இடம் எதுவெனக் கேட்டால் அது யாழ்ப்பாணமாகத்தான் இருக்கக்கூடும். கடலட்டையினை ஈழத்தமிழர்கள் யாருமே சாப்பிடுவதில்லை. இன்றைக்கு அது ஏற்றுமதி முக்கியத்துவம் வாய்ந்த - அதுவும் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஓர் உணவுப்பொருளாக மாறியிருக்கின்றது. இதனால் யாருக்கு இலாபம்? விரல்விட்டு எண்ணக் கூடிய சிலருக்குத்தான். இதனால் உள்ளூர் மீன்பிடி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. காலப்போக்கில் எமது உள்ளூர் மீனவர்கள் தொழில் செய்வதற்குரிய சிறு மீன்கள் இல்லாமல் போகக்கூடிய ஒரு சூழல்தான் உருவாகிவருகின்றது. இறால் பண்ணைகள் புத்தளத்தை எவ்வாறு நாசப்படுத்தினவோ, அதே போல யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள கடல்வளத்தை இந்த அட்டைப்பண்ணைகள் நாசம் செய்யப்போகின்றன. ஒற்றையின உயிரினத்தை வலுக்கட்டாயமாக இடம்பெயரச்செய்து வளர்க்கும்போது, கட்டாயமாக அதற்குரிய உணவாக இரசாயனங்கள் பயன்படுத்தப்படும். எனவே கடலின்மீது கொட்டப்படும் இந்த இரசாயனங்கள் எங்களின் கடல்வளத்தை விரைவாகவே அழிக்கும். காலநிலை மாற்றத்திற்கு ஒரு வழியில் பங்களிப்புச்செய்வது பெற்றோலிய எரிபொருள் என்றால், இன்னொன்று பண்ணைகள். பெரும்பண்ணைகளில் வளர்க்கின்ற விலங்குகளிலிருந்து வருகின்ற மீத்தேன் வாயுவானது காபனீரொட்சைற்றை விட புவியை அதிகளவில் வெப்பமேற்றும் தன்மைவாய்ந்தது. இதுமட்டுமல்லாது எமது தேவைக்கான மீன் உற்பத்தியும் குறைந்துவருகின்றது. மீன் உணவுகள் அதிகளவில் புரதத் தேவையைப் பூர்த்திசெய்கின்றன. மீன்கள் வெறுமனே பணக்காரர்களுக்குரிய உணவு மாத்திரமல்ல. ஏழைகளின் புரதத்தேவையை பூர்த்திசெய்யும் உணவும்கூட. இவ்வாறு மீன்வளம் குறைகையில் கடல்வாழ் உயிரினங்களின் பல்வகைத்தன்மையும் சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்படித்தான் போருக்குப் பின்னர் அபிவிருத்தி என்கிற பெயரில் உருவாகிவரும் தொழில்கள் எமது வளத்தை அழித்துவருகின்றன.

**கேள்வி: தமிழ் பொதுவேட்பாளர் குறித்துத் தங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமானது கொள்கை ரீதியாக தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தை ஏற்றுக்கொள்கின்றது. இலங்கையில் ஜனாதிபதியொருவர் பொதுமக்கள் அளிக்கும் வாக்குகளினால்தான் தெரிவுசெய்யப்படுகின்றார். ஆனால் நாங்கள் அளிக்கும் வாக்குகள் மட்டும்தான் இலங்கையின் ஜனாதிபதியைத் தீர்மானிக்கின்றன என யாரும் நினைத்துவிடக்கூடாது. இலங்கையின் ஜனாதிபதியாக யார் வரவேண்டுமென்பதை இந்தியாவும் அமெரிக்காவும்தான் தீர்மானிக்கின்றன. தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் தற்சமயம் சொல்லப்படுகின்ற சஜித் பிரமேதாஸ, ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திஸ்ஸநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர்களில் தமிழர்கள் சார்ந்த நிலைப்பாட்டை அவர்கள் யாரும் எடுக்கப்போவதில்லை. தமிழர்களுக்கு எதையுமே அவர்கள் செய்யப்போவதுமில்லை. ஏனெனில் வட மாகாணசபைக்கான இரண்டாவது தேர்தல் நிறைவுற்று, இன்றைக்கு இரண்டாவது ஆட்சிக்காலமும் முடிவடைந்திருக்க வேண்டும். அதைப்பற்றி இவர்கள் யாருமே கருத்திலெடுக்கவில்லை. தாம் ஆட்சியைப் பிடித்த பின்னர்தான் செய்வோம் என்கிறார்களே தவிர, எதைச்செய்வோம் எனச் சொல்கிறார்கள் இல்லை. 13 ஆம் திருத்தச் சட்டத்தை உள்ளவாறு அமுல்படுத்துவோம் என்கிறார்களே தவிர, அது எழுதப்பட்ட காலத்திலிருந்தா அல்லது அதிலிருந்து நீக்கப்பட்ட விடயங்களைத் தவிர்த்தா என்று எதையும் சொல்லவில்லை. 13 ஆம் திருத்தச்சட்டத்திலிருந்து ஒவ்வொன்றாகப் பிடுங்கியெறிந்துவிட்டார்கள். இப்போது அது வெறுங்கோதாகத்தான் இருக்கிறது. நல்லாட்சிக் காலத்தில்கூட எழுதப்படாத உடன்படிக்கைகள், இதயத்தால் எழுதப்பட்ட உடன்படிக்கைகள் எனப் பல எழுதப்பட்டன. ஆனால் அவை எதுவும் நடைமுறையில் இல்லை. ஆகவே எங்களைப் பொறுத்தவரையில், இந்த ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. எங்களின் அடுத்த தலைமுறையினர் விரைவாகத் தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்படுகின்றனர். எங்களின் தலைமுறையினர் ஏதோ ஒரு வகையில் இன விடுதலைக்கான போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் அல்லது, அதை அறிந்தவர்கள். நாங்கள் உயிருடன் இருக்கும்வரையில் இந்த விடயங்களைப் பேசுவோம். பதிவுசெய்வோம். எங்களுக்கு அடுத்த தலைமுறையினர் போராளிகளாகவே களத்தில் நின்றவர்கள். அவர்கள் வாயே திறக்கமுடியாதளவுக்கு இராணுவ நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அடுத்த தலைமுறை இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தயாராகின்றது. யுத்தம் நிறைவுறும்போது அவர்களுக்கு மூன்று வயது. அவர்களுக்கு கடந்தகாலம் குறித்து எதுவுமே தெரியாது. எனவே அவர்களுக்கான வேலைத்திட்டங்கள்தான் இப்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தத் தலைமுறையினரை மிக இலகுவாகத் தமிழ்த் தேசிய நீக்கம் செய்துவருகின்றனர். அவ்வாறு தேசிய நீக்கம் செய்கின்றபடியால்தான், சுதந்திரக் கட்சி என்று அங்கஜன் இராமநாதனாலும், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று பொய்சொல்லி டக்ளஸ் தேவானந்தாவாலும் வெற்றிபெற முடிகின்றது. எனவே நாம் ஒரு பொது இலக்கு அல்லது கொள்கையை முன்னிறுத்தி ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவதன் மூலம் புதிதாக வாக்களிக்கத்தயாராகும் புதிய தலைமுறையை நிச்சயமாக ஒரு நேர்கோட்டுக்குக் கொண்டுவரலாம். ஆகவே இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பத்து லட்சமோ, பதினைந்து லட்சமோ வாக்குகள் பெறவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், குறைந்தபட்சம் இந்தத் தேர்தலில் சில லட்சம் வாக்குகளையாவது நாம் திரட்டுவோமாக இருந்தால் அது புதியதொடக்கமாக இருக்கும்.

ஆனால் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியத்தை மேடைக்கு மேடை பேசுகின்ற கட்சிகளினாலேயே ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், இன்றிருக்கின்ற தமிழ்க் கட்சிகளின் அரசியல்வாதிகள், மக்களிடம் தமிழ் தேசியம் பேசுகின்றவர்களாகவும், தென்னிலங்கையிடம் சகல வசதிகளும் பெறுபவர்களாகவுமே இருக்கிறார்கள். தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகளே மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரங்களைப் பெற்று விற்பனை செய்திருக்கிறார்கள் என்பது பொதுவான குற்றச்சாட்டு. காணி மீட்புக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொள்ளும் தமிழ் அரசியல்வாதிகள், போதைவஸ்துப் பாவனைக்கு எதிராகப் போராடும் தமிழ் அரசியல்வாதிகள், மதுபான ஒழிப்புக்கும், மதுபான சாலைகளுக்கும் எதிராக மக்கள் போராடும்போது அதில் கலந்துகொள்வதில்லை. இவர்கள் ஏதோ ஒருவகையில் அரசாங்கத்திடம் நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கின்றனர். இப்படியான தமிழ்த் தலைவர்களால் சுயமாக எந்த முடிவையும் எடுக்க முடியாது. தமிழ்த் தலைவர்கள் பலர் தாங்கள் எந்த சிங்களத் தலைவருக்கு வாக்களிப்போம் என்பதற்கான வாக்குறுதிகளை அளித்திருப்பார்கள். இதையெல்லாம் கடந்துதான் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்கிற விடயம் வலுப்பெற வேண்டியுள்ளது. ஆனால் ஒரு கோரிக்கையின்பாற்பட்டு தமிழர்கள் ஒன்றுபடுபவதை தமிழர்களுக்கு எதிரான சக்திகள் விரும்பமாட்டாது. இதனைக் குழப்புவதற்கான, இல்லாமல் செய்வதற்கான உத்திகள் அனைத்துமே பிரயோகிக்கப்படும். கட்சிகளுக்கு அப்பால் ஒரு கோரிக்கையின்பாற்பட்டு தமிழ் மக்கள் இணைவதை இந்தியாகூட விரும்பாது.



# அழிக்கப்படும் முள்ளிவாய்க்கால்

● ஆர்.சுகந்தன்

வெறும் வெண்மணல் பரப்பாக விரிந்து கிடக்கின்ற முள்ளிவாய்க்கால் நிலமானது, பல்வேறு சாட்சியங்களைத் தன்னுள் புதைத்து வைத்திருக்கின்றது. ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இனப்படுகொலையின் பௌதீக சாட்சியாகக் கிடக்கும் அந்த நிலத்தை ஈழத்தமிழர்களும், அவர்களை வழிநடத்தும் அரசியல்வாதிகளும் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதி அந்நிலம் நோக்கிப் படையெடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள், அங்கு ஒரு பிரமாண்டமான இனப்படுகொலை நினைவுச்சின்னம் அமைக்கப்பட வேண்டும் என ஊடக அறிவிப்பைச் செய்வர். ஆனால் அன்றைய நாளோடு அந்த வாக்குறுதி மறக்கப்பட்டு விடும். அடுத்த வருட நினைவேந்தல் வரைக்கும் அந்தப் பகுதியை யாரும் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள். நினைவேந்தல் ஒருங்கிணைப்புக் குழு கூட மே 17 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதி இரண்டு மணிவரைக்கும்தான் அங்கே நின்று பரபரப்புக் காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கும். கடந்த பதினைந்தாண்டுகளாக இதே நிலைதான் நீடிக்கிறது.

தற்போது முள்ளிவாய்க்கால் நிலத்தை நோக்கி சர்வதேசக் கவனம் திரும்பியிருக்கின்றது. கடந்த மாதம் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் சர்வதேச மனிதவுரிமைசார் அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வதேச ஊடகங்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அஞ்சலி செலுத்தினர். ஆனால் வந்திருந்த ஊடகங்களும் சரி, சர்வதேசப் பிரதிநிதிகளும் சரி எவ்விடத்திலேனும் வார்த்தை தவறியேனும் தமிழ் இனப்படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. இதுகுறித்து சர்வதேச ஊடக நிறுவனப் பணியாளர் ஒருவரிடம் வினவியபோது, தங்களின் ஊடகம் இலங்கை குறித்த செய்திகளில் இனப்படுகொலை என்கிற வார்த்தையைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதித்திருப்பதாகவும், மே 18 நினைவேந்தல் நிகழ்வில் இனப்படுகொலை என்கிற வாசகம் பொருந்திய ஒளிப்படங்களைக்கூட தாம் எடுக்க முடியாதெனவும் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்கள் தம் மீது மேற்கொள்ளப்பட்டிருப்பது இனப்படுகொலைதான் எனக் கடந்த பதினைந்தாண்டுகளாக பிரகடனம் செய்துவருகின்றனர். ஆனால் அதனை யாரும் ஏற்காத நிலையே நீடிக்கிறது. எனவே இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு ஈழத்தமிழர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இனப்படுகொலை குறித்துப் பரப்புரை செய்யவேண்டியுள்ளது. இறுதிப் போர் வலயம் முழுவதும் சிதறிக்கிடக்கும் இனப்படுகொலைக்கான சாட்சியங்களை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் இந்தத் தேவையுணர்ந்து யாரும் காரியமாற்றுவதாகத் தெரியவில்லை.

ஆனால் இலங்கை அரசு இந்த விடயத்தில் தெளிவாக இருந்தபடி செயற்படுகின்றது. தற்போது முள்ளிவாய்க்கால் நிலத்தை மையப்படுத்தி முன்னெடுக்கப்படும் அரச வேலைத்திட்டங்கள் அதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

அந்தவகையில் இம்முறை நினைவேந்தலில் அவதானிக்கப்பட்ட மிகமுக்கியமான விடயங்களில் ஒன்று, நினைவேந்தல் இடம்பெறும் காணி சம்பந்தமானது. தற்போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெறும் வளாகமானது, அரசுக்கு சொந்தமானது. அந்தக் காணியை பிரதேச சபையின் கீழ் கொண்டுவந்து, நினைவேந்தல் மையமாகப் பிரகடனம் செய்வதற்கான பணிகள், வட மாகாண சபை இயங்கும் காலத்தில் முன்னெடுக்கப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும், நினைவேந்தல் ஒருங்கிணைப்புக்குழுவும் அதிக கவனமெடுக்காமை காரணமாக, எவ்வித முன்னேற்றமும் இடம்பெறவில்லை. தற்போது, பிரதேச சபைகள் செயலற்றிருக்கின்ற நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மையம் நிலஅளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட்டிருக்கின்றது. எந்த அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் கவனம் எடுக்கவில்லை. தமது எதிர்ப்பை வெளியிடவில்லை. எனவே குறித்த நினைவேந்தல் மையத்தினை அரசு தன் நிலம் என வர்த்தமானி அறிவிப்புச் செய்து, அபகரித்துக்கொள்ள அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பின் குறியீடாக இன்றும் எஞ்சியிருப்பது முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தைக் கட்டடம் மாத்திரமே. பதுங்குகுழியின் எச்சங்கள், துப்பாக்கி ரவை பதிந்த சுவர்கள், போராளிகளின் ஆடைகள், பொதுமக்களின் பாவனைப்பொருட்கள் என அந்தச் சூழலில் இனப்படுகொலையை நினைவுபடுத்துகின்ற பல விடயங்கள் இருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதி மாவீரர் மண்டபமாகவும் அந்தச் சந்தைக் கட்டடத்தொகுதி செயற்பட்டிருக்கின்றது. எனவேதான் அதனையாவது இனப்படுகொலையின் நினைவாக அப்படியே பேணிப்பாதுகாப்பதும், ஆவணப்படுத்துவதும் அவசியமானதாகும். ஆனால் அந்தக் கட்டடத்தை இடித்துப் புதிய சந்தைத்தொகுதியொன்றை அவ்விடத்தில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர்மடம், வட்டுவாகல் ஆகிய பகுதிகள் இறுதிப்போர் காலத்தில் முக்கியமான இடங்களாக இருந்தன. ஒவ்வொரு அங்குல நிலத்திலும், இனப்படுகொலையான தமிழர்களின் புதைகுழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு அங்குல நிலத்திலும் போர்க்காலத்தை நினைவுபடுத்துகின்ற பொருட்கள் சிதறிக்கிடந்தன. இறுதியாக உணவு உண்ட உணவுப் பாத்திரம் தொடக்கம், பதுங்குகுழிக்கு பயன்படுத்திய உடுபுடவைகள் வரைக்கும் அந்நிலமெங்கும் சிதறிக்கிடந்தன. ஆனால் இன்று அவை அனைத்தும் திட்டமிட்ட வகையில் அகற்றப்பட்டிருக்கின்றன. தெற்கிலிருந்து வருகைதரும் இரும்பு வியாபாரிகளுக்கு அப்பொருட்களை உள்ளூர் மக்கள் வியாபாரம் செய்துவிட்டனர். காணிகளைத் துப்பரவு செய்கிறோம் என்கிற பெயரில், அங்கு கிடந்த துணிகள் உள்ளிட்ட பொருட்களை எரித்துவிட்டனர். தன் வரலாற்றைச் சரியாகப் பேணவும், ஆவணப்படுத்தவும் தெரியாத இனமாகத் தமிழர்கள் இருக்கின்றமையும், இது குறித்த விழிப்புணர்வு தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லாமல் இருக்கின்றமையுமே இதற்குப் பிரதான காரணமாகும். உலகம் முழுவதும் இனப்படுகொலைக்குள்ளான இனங்கள் இதுபோன்ற விடயங்களை பல நூற்றாண்டுகள் கடந்தும் ஆவணப்படுத்தி வைத்திருக்கின்றன. மிகப்பெரிய இனப்படுகொலையின் பின்னர் இஸ்ரேலியர்கள் தமக்கான நாட்டைக் கட்டமைத்துக்கொண்டாலும், தம் மீது ஜேர்மனியர்கள் நடத்திய இனப்படுகொலையை நினைவுபடுத்தும் ஆவணங்களை, ஆவணக்காப்பகங்களில் இன்றும் வைத்திருக்கின்றனர். உலகப் போர்க்காலத்தில் அணுகுண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட ஜப்பானியர்கள் அந்தப் பாதிப்பின் எச்சங்களை இன்றும் ஆவணப்படுத்தி வைத்திருக்கின்றனர். உலகம் நன்கு வளர்ச்சியடைந்துவிட்ட யுகத்தில், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இனப்படுகொலைக்குள்ளான இனமொன்று, அதற்கான ஆவணங்களைத் தவறவிட்டிருப்பது எவ்வளவு துயரமானது?

அடுத்து வட்டுவாகல் பாலம். இறுதிப் போரின் நாட்களை நினைவுகூறும் எவராலும் வட்டுவாகல் பாலத்தைத் தவிர்க்க முடியாது. பாலத்தைக் கடந்த பலர் இன்று உயிரோடில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டு விட்டனர். பாலத்தில் இருமருங்கிலும் இராணுவத்தால் சுடப்பட்ட நிலையில் இறந்து மிதந்தவர்களின் எண்ணிக்கை பல்லாயிரம். இவ்வளவு பெறுமதிமிகு நினைவுகளைக் கொண்டிருக்கும் வட்டுவாகல் பாலம் மிக விரைவில் மீளப் புனருத்தானம் செய்யப்படப் போகின்றது. அந்த பாலத்தை நீக்கிவிட்டுப் புதிய பாலமொன்றை அமைத்துத் தரும்படி உள்ளூர் மக்களே அரசைக் கோரியிருக்கின்றனர்.


இப்படியாக தமிழ் இனப்படுகொலையின் பௌதீக சாட்சியங்களாக இருக்கின்ற பல விடயங்களும் விரைவாகவே அழிக்கப்பட்டு வருகின்றன. அனேகமாகத் தமிழினப் படுகொலையின் இருபதாம் ஆண்டு நினைவேந்தல் செய்யும் போது மேற்குறித்த எந்த நினைவேந்தல் எச்சங்களும் முள்ளிவாய்க்காலில் இருக்கப்போவதில்லை.

இந்த வேலைத்திட்டங்களின் பின்னணியில் இராணுவம் இருக்கின்றமையும் அரசல்புரசலாகத் தெரியவந்தது. முள்ளிவாய்க்கால் பகுதியில் இன்னமும் துப்பரவு செய்யாதிருக்கும் காணிகளை, வீடுகளைத் தம் ரோந்து நடவடிக்கைகளின்போது அவதானிக்கும் இராணுவத்தினர், அப்பகுதியில் காணப்படும் வீட்டுத்தளபாட பொருட்கள், பாவனைப் பொருட்கள் போன்றவற்றை அடையாளம் கண்டு, அதனைத் தமக்கு நெருக்கமான பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்றனர். இராணுவம் அவ்விடத்தை விட்டு சென்றபின்னர் அங்கு செல்லும் குறித்த பொதுமக்கள் அங்கு கிடைக்கின்ற அனைத்துப் பொருட்களையும் இரும்புக்கு எடைபோட்டு விடுகின்றனர். இந்த வருமானத்தில் ஒரு பாதி இடத்தை அடையாளமிட்டுக்கொடுக்கின்றவர்களுக்கும் பகிரப்படுவதாகவும் செய்தியுண்டு.

இப்படியாக முள்ளிவாய்க்கால் என்கிற ஈழத்தமிழர்களின் இனப்படுகொலை சாட்சிய நிலம் அழிக்கப்படுகின்றது. ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்ட அந்நிலத்தில் எஞ்சிக்கிடக்கும் தடயங்களைக்கூட விட்டுவைக்காது அழிக்கும் வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விடயங்களில் விழிப்புணர்வற்ற மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் அதற்குத் துணைபோவதுதான் கவலைதருகின்ற செய்தி.

# கடந்த கால துயரங்களின் பாரங்களையெல்லாம் சுமப்பவர்

**பிரவீனா துரைராஜசிங்கம் முகுந்தன், பெர்த்தில் வாழ்ந்துவரும் ஈழத்தைச் சேர்ந்த ஏதிலி. தொடர்ச்சியாக 12 வருடங்கள் இங்கே வசித்த பொழுதும் குடியேற்ற விசா நிராகரிக்கப்பட்டு, அவருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அத்தனை வாய்ப்புகளையும் இழந்து நீதி மன்றங்களின் வாசல்களில் நியாயத்திற்காகப் போராடி வருபவர். பவர் லிப்ட் பிரிவில் தேசிய சாதனையாளர். எதிரொலி சார்பாக அவருடனான உரையாடலின் சில துளிகள் இங்கே பிரசுரமாகின்றன.**



**எதிரொலி : பொதுவாக தமிழர்கள் தங்களது இரண்டாவது பெயராக தங்களது தந்தையின் பெயரையே வைப்பது வழக்கம். துரைராஜசிங்கம் என்பது உங்கள் அப்பாவின் பெயரல்லவா. உங்கள் பெயரிலுள்ள முகுந்தன் என்பது யார் ?**

**பிரவீனா :** பிரவீனா முகுந்தன் என்பதுதான் எனது முழுப்பெயராக இருந்திருக்கவேண்டும். குடிவரவுத் துறையினர் குளறுபடி செய்து எனது தாத்தாவின் பெயரைச் சேர்த்து விட்டனர். துரைராஜசிங்கம் என்பது எனது தாத்தாவின் பெயர்.

**எதிரொலி : நீங்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர். நீங்கள் இலங்கையில் எங்கு பிறந்து, வளர்ந்தீர்கள்? நீங்கள் பிறந்து வளர்ந்த இடத்தைப் பற்றிய ஏதாவது மறக்க முடியாத நினைவுகள் இருக்கின்றவா ?**

**பிரவீனா :** நான் பொய் சொல்லப் போவதில்லை, பூர்வீகம் குறித்து அதிகமான நினைவுகள் இல்லை, ஏனென்றால் நான் ஒன்பதரை வயது இருக்கும் போது அங்கிருந்து வெளியேறினேன். பெரும்பாலான நேரங்களில் நாங்கள் வாழ்ந்த வீடு மட்டுமே மங்கலாக என் நினைவில் இன்னுமிருக்கிறது, என் தாத்தா, பாட்டி மற்றும் எங்கள் குடும்ப உறுப்பினர்களைப் போலவே நாங்கள் எங்களது குடும்ப வீட்டில் வசித்து வந்தோம். எனது சொந்த ஊரான மட்டக்களப்பிலிருந்து 2012 இல் ஆஸ்திரேலியா வந்து சேர்ந்தேன். ஆஸ்திரேலியாவுக்கு படகில் வந்தது மட்டுமே நினைவுகளில் இருக்கிறது. ஆமாம், அதுதான் இலங்கையைப் பற்றி எனது முக்கியமான நினைவாக இருக்கிறது.

**எதிரொலி: நீங்கள் படகு மூலம் ஆஸ்திரேலியா வந்தீர்கள், அது மிகவும் சவாலான பயணம், அந்த பயணத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது நினைவிருக்கிறதா? பயணத்தின் போது நீங்கள் சந்தித்த போராட்டங்கள் எதையாவது நீங்கள் நினைவுகூர முடியுமா?**

**பிரவீனா :** எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நாங்கள் பயணிக்கவிருந்த கப்பல் ஒரு சிறிய படகு அந்தப் படகில் எங்களைப் போன்று 60க்கு மேற்பட்ட ஏதிலிகள் எங்களுடன் பயணம் செய்தனர் என்று நினைவு. நாங்கள் கோகோஸ் தீவுக்குச் செல்ல 20 நாள் ஆனது, ஓட்டுநர் இருக்கை இருக்கும் இடத்தை ஒட்டிய இடத்தில் நாங்கள் உள்ளே இருந்தோம். ஏனெனில் படகில் குழந்தைகள் மற்றும் பொருட்களை விட அதிகமான மக்கள் இருந்தனர். என் மூத்த சகோதரன் மற்றும் இளையவனைப் போன்ற மற்றொரு குழந்தையும் இருந்தது. சிறிய இடத்தில் எல்லோரும் நசுக்கப் பட்டது போல பயணித்தோம், அது மிக கடினமான அனுபவம். அதை இப்பொழுது எண்ணிப்பார்க்கும் பொழுது அது எங்களுக்கெல்லாம் மறக்க முடியாத பயணம் என்று மட்டுமே சொல்ல முடியும்.

**எதிரொலி : உள்நாட்டுப் போரின் கடைசிக் கட்டத்தில் நீங்கள் இலங்கையில் இருந்தீர்கள். அந்தப் போர் குறித்த நினைவுகள் இருக்கின்றனவா?**

**பிரவீனா :** மன்னிக்கவும். எனக்கு அப்பொழுது மிகவும் சிறிய வயது . எனக்கு போர் குறித்தான நினைவுகள் எதுவும் நினைவில் இல்லை

**எதிரொலி : நீங்கள் ஆஸ்திரேலியாவில் முதலில் இறங்கிய இடம் கோகோஸ் தீவு . நீங்கள் அங்கு இறங்கிய பிறகு என்ன நடந்தது? எல்லைப் பாதுகாப்பு படை குடிவரவுத் துறையினர் உங்களை எவ்வாறு நடத்தினார்கள் ?**

**பிரவீனா :** குடிவரவுத் துறையினர் எங்களை தடுத்து நிறுத்தி ஒரு கூடாரம் போன்ற சிறிய இடங்களுக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கே எங்களைப் போல நிறைய அகதிகள் இருந்தனர். அங்கே முறையான படுக்கைகள் கூட இல்லை. நாங்கள் நிறைய நாட்கள் அங்கே இருக்கவில்லை. நாங்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப்படுவதற்கு முன்பு ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் மட்டுமே அங்கு இருந்தோம்.

**எதிரொலி : கோகோஸ் தீவில் இருந்து நீங்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப் பட்டீர்கள், அங்கே என்ன நடந்தது ?**

**பிரவீனா :** கிறிஸ்மஸ் தீவில் எங்களை அங்குமிங்குமாக மாற்றி அலைக்கழித்தனர், சிறிய அறைகளில் தங்கவைக்கப்பட்டோம். சரியான உணவு வகைகளும் தரப்படவில்லை. அங்கிருந்த இராணுவத்தினர் சில நேரங்களில் நன்றாக இருப்பர். சில நேரங்களில் மிகக் கடுமையாக நடந்து கொள்வார்கள் . ஆனால் நாங்கள் நடத்தப்பட்ட விதம் உண்மையில் நன்றாக இல்லை என்று நான் நினைக்கிறேன்

**எதிரொலி: கிறிஸ்மஸ் தீவில் என்னவாயிற்று ? அங்கேயே தான் வெகுநாட்கள் இருந்தீர்களா ?**

**பிரவீனா :** கிறிஸ்மஸ் தீவில் நிறைய நாட்கள் இருக்கவில்லை. எங்களைத் திடீரென்று ஒரு நாள் விமானத்தில் ஏறச்சொன்னார்கள். எங்களுக்கு பெரும் அதிர்ச்சி. நாங்கள் எங்கே போகிறோமென்று தெரியவில்லை. மனஸ் தீவிற்கு அனுப்பினார்கள். என் வாழ்க்கையின் கொடூரமான நாட்கள் அவை. அந்த தீவிற்கு நாங்கள் சென்றபொழுது ,நாங்கள் தான் அந்த தீவிற்கு முதல் குடியேற்றம் செல்வது போல் இருந்தது.

அங்கு நாங்கள் எட்டு மாதங்கள் தங்கியிருந்தோம், எனவே நாங்கள் அங்கு சென்றபோது தான், மனஸ் தீவுக்குச் சென்ற முதல் குழு என்பதை உணர்ந்து கொண்டோம். எந்த அடிப்படை வசதியும் அங்கில்லை.முகாம் வீடுகளுக்கு கதவுகள் கிடையாது. எந்த நேரமும் பாம்புகள் வரலாம். உண்மையில் படுக்கைக்கு அடியில் பாம்புகள் இருக்கும். அங்கு எந்த நேரமும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டோ அல்லது கதவுகளை உடைக்கவோ செய்வார்கள். எந்தப் பாதுகாப்பும் கிடையாது. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் காவலில் இருந்ததால் எனக்கு அடிப்படைக் கல்வி கிடைக்கவில்லை.நான் இரண்டு வருடங்களாக கல்வியைத் தவறவிட்டேன். கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை மற்றும் எந்த அடிப்படை வசதிகளும் அந்தத் தீவிலில்லை. நிறைய மக்கள் நோய்வாய்ப்பட்டார்கள். இப்பொழுது எண்ணிப்பார்க்கும் பொழுது அந்த நாட்கள் மிக மோசமான நாட்கள்.

**எதிரொலி : மிகவும் இளைய வயதில் எவ்வாறு உங்களால் இந்த மாதிரியான கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ள முடிந்தது?**

**பிரவீனா :** உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் நான் எப்போதும் போலவே இருந்தேன். நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். எதிர்மறையான சூழ்நிலைகளில் பொறுமையாகவும் நேர்மறையான மனநிலையிலும் இருக்க கற்றுக்கொண்டேன். நான் எப்போதும் இந்த மனப்பான்மையைக் கொண்டிருந்தேன் என்று நினைக்கிறேன். நான் எனது வாழ்க்கையில் மற்ற விஷயங்களைத் துணிவுடன் செய்ய முயற்சிப்பதற்கான தைரியம் அங்கே தான் கிடைத்ததென்று நினைக்கிறேன் . அந்தக் கடினமான நாட்களை கடந்து செல்வதற்கு என் குடும்பம் மிக உறுதுணையாக இருந்தது .நம்மால் முடிந்தவரை நேர்மறையாக இருக்க முயற்சி செய்யவேண்டும்.

**எதிரொலி : மனஸ் தீவிற்கு பிறகு என்ன வாயிற்று. குடியேற்ற விசா எப்போது கொடுத்தார்கள் ?**

**பிரவீனா :** மனஸ் தீவுக்குப் பிறகு நாங்கள் சுமார் இரண்டு மாதங்களுக்கு கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பப்பட்டோம் என்று நினைக்கிறேன். கிறிஸ்மஸ் தீவில் இருந்து நாங்கள் டார்வினுக்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு அனுப்பப்பட்டோம், பின்னர் டார்வினிலிருந்து நாங்கள் மீண்டும் கிறிஸ்மஸுக்கு அனுப்பப்பட்டோம், பின்னர் அடிலெய்டுக்கு அனுப்பப்பட்டு அங்கேயே தங்கினோம். சில காலம் கழித்து எங்கள் குடியேற்ற வழக்கு வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 2015 இல் எங்களை வெளியேற்ற முடிவு செய்தனர்.

**எதிரொலி : இப்படி உங்களை ஒவ்வொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது அதற்கான காரணம் என்னவென்று கூறினார்களா ?**

**பிரவீனா :** இல்லை. அது அவர்களின் வழக்கமான நடைமுறை தான். அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள். எப்பொழுதும் எந்தக் காரணமும், எங்கே கூட்டிச் செல்கிறோம் என்பதையெல்லாம் சொல்லும் வழக்கம் அவர்களுக்கு இருந்ததில்லை. ஏனெனில் குறிப்பிட்ட காரணம் ஏதேனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

முகாமிற்கு அகதிகளை இங்கிருந்து அங்கு கொண்டு செல்வது மற்றும் மக்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வது மூலம் மக்களைக் கடினமான சூழலுக்கு உட்படுத்துவது அவர்களின் நோக்கமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

**எதிரொலி : மிக இளவயதில் எங்கு போகிறோம் மற்றும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதெல்லாம் தெரியாமல் அங்குமிங்கும் அலைக்கழிப்பது மிகக் கொடுமையானது. அடிலெய்டில் விசா கிடைத்தது என்று கூறினீர்கள். அங்கிருந்து பெர்த் நகரத்திற்கு எப்போது இடம் பெயர்ந்தீர்கள் ?**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**பிரவீனா :** எங்கள் வழக்கை குடியேற்றத் துறையினர் ஏற்றுக்கொண்டனர். அப்பொழுது எங்களிடம் நீங்கள் எங்கு செல்லவிரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் தேர்வு செய்யலாம் என்றார்கள். எங்கள் மாமா அந்த நேரத்தில் சிட்னியில் வசித்தார், அவர் தான் நீங்கள் பெர்த்துக்கு செல்லலாம் என்று சொன்னார்கள். அதனால் நாங்கள் பெர்த்துக்கு செல்ல முடிவு செய்தோம்.


**எதிரொலி : பெர்த் நகருக்குச் சென்ற பிறகு என்ன நடந்தது ? 2012 முதல் 2015 வரை உங்களுக்கு எந்த அடிப்படைக் கல்வியும் கிடைக்கவில்லை இல்லையா ?**

**பிரவீனா :** நாங்கள் பெர்த்துக்குச் சென்றபோது பள்ளிக்கு விண்ணப்பிக்க குடிவரவுத் துறை எங்களுக்கு உதவியது, அது ஒரு தனியார் பள்ளி. நீங்கள் தகுதியுடையவராக இருந்தால் மைய நீரோட்டத்திற்கு செல்ல முடியும் என்பதால் கடுமையாக தொடர்ந்து படித்தேன். ஒரு விதத்தில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. எனக்கு ஏழாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உயர்தரக் கல்வி தனியார் பள்ளியில் இலவசமாக கிடைத்தது. கடுமையாகப் படித்தேன் . ஏனெனில் நான் கடந்து வந்த போராட்டங்கள் மற்றும் கஷ்டங்கள் எல்லாம் எனக்குத் தெரியும், அதனால் நான் விரும்பினேன். வாழ்க்கையில் நிறையச் சாதிக்க ஒரே வழி கல்வி மட்டுமே. நான் ஒரு டாக்டராக வரவேண்டும் என்று கனவு கண்டேன். அதனால் 12 ஆம் வகுப்பு இறுதித்தேர்வில் எனக்கு நல்ல ATAR மதிப்பெண் கிடைத்தது. இரண்டு பல்கலைக்கழகங்களில் மருத்துவம் பயில எனக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அந்தச் சமயத்தில்தான் எனது விசாவை நிராகரிக்க குடியேற்ற துறை முடிவு செய்தது.

**எதிரொலி : ஏன் விசாவை நிராகரித்தார்கள்?**

**பிரவீனா :** அவர்கள் எங்களிடம் சொன்னார்கள் . “நீங்கள் இப்போது உங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்லலாம். இப்போது திரும்பிச் செல்வது பாதுகாப்பானது” என்று. 2012 முதல் 10 வருடங்களுக்கும் மேலாக இங்கு இருக்கிறேன். அதனால் நான் இலங்கையில் வாழ்ந்ததை விட இங்குதான் அதிகம் வாழ்ந்தேன். உண்மையில் சொல்லப்போனால் இதுதான் எனது வீடு. சிறுவயதிலிருந்து இங்கே வாழ்ந்த ஒருவரை திரும்பிப் போகச்சொல்வது நியாயமில்லை. இவர்கள் எங்களது குடிவரவு விசாவினை நிராகரித்ததால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைத் தவறவிட்டேன். என்ன செய்வது. இதற்கெல்லாம் நொறுங்கிப் போகின்றவள் நானில்லை. மனம் தளராமல் உடல்நலம் மற்றும் தாதியத் துறையில் மூன்றாம் படிவ படிப்பை நிறைவு செய்தேன் .

**எதிரொலி : விசாவினை நிராகரித்தது அநியாயமான செயல். உங்கள் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. நீங்கள் நல்ல ATAR மதிப்பெண் பெற்றுள்ளீர்கள். விசா குளறுபடிகள் இல்லாதிருந்தால் நீங்கள் மருத்துவத்திற்குச் சென்றிருப்பீர்கள் அல்லவா?**




**பிரவீனா :** ஆமாம். என் கனவுகள் எல்லாம் கொடுமையாக நசுக்கப்பட்டதைப் போல உணர்ந்தேன். நீங்கள் போரின் காரணமாக சொந்த நாட்டை விட்டு வெளியேறுகிறீர்கள், பின்னர் நீங்கள் பிரகாசமான எதிர்காலம் ஒன்று இருக்கப்போகிறது என்றுவேறு ஒரு நாட்டிற்கு வருகிறீர்கள். ஆனால் உங்கள் கனவுகள் எல்லாம் குடியேற்ற விசாவினால் சிதைவது எவ்வளவு வேதனை தரும் விஷயம். என் கனவுகள் நசுக்கப்பட்டன, நான் கடினமாகப் படித்தது ஒரு நல்ல ATAR கிடைத்து விசாவினால் எனது மருத்துவ படிப்பு நிராகரிக்கப்பட்டதை நியாயமற்றதாக உணர்ந்தேன். நான் ஒரு மருத்துவராக ஆக வேண்டுமென்று நினைத்தேன் .நான் விரும்பியபடி நடக்கவில்லை .அதன் பின்னர் குடியேற்றப் போராட்டத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது.எங்கள் வழக்கு IAA (Immigration Assessment Authority) க்கு திரும்பிச் சென்றது, பின்னர் IAA அதை நிராகரித்தது. பின்னர் மீண்டும் நீதிமன்றத்திற்குச் செல்லும்போது வழக்கு நீதிமன்றத்தில் வெற்றி பெறுகிறது. ஆமாம் , நீதிமன்றத்தில் எங்கள் வழக்கு இரண்டு முறை வெற்றி பெற்றது என்று நினைக்கிறேன். ஆனால் குடியேற்றத் துறை ஒவ்வொரு முறையும் எங்கள் விசாவை நிராகரிக்க செய்தது. இப்படியே நீதிமன்றம், விசாரணை, குடியேற்றத்துறை என்று முன்னும் பின்னுமாகச் செல்வது மிகவும் கொடூரமானது. இந்த விசாரணைகள், நிலையற்ற தன்மையெல்லாம் உங்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தைத் தரக்கூடியவை . ஏனென்றால் அடுத்து என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியாது மற்றும் உங்கள் கைகளில் இல்லை என்பதைப் போல் ஒரு கொடுமை இந்த உலகத்தில் கிடையாது . இந்த சிக்கலான காலகட்டத்தில் நம்மால் செய்யக்கூடிய ஒன்று என்பது, அமைதியாக பிரச்சினைகளை எதிர்கொள்வது மட்டும் தான் .

**எதிரொலி : இந்த கொடுமையான மன அழுத்தங்களையெல்லாம் தாங்கி உங்களால் எவ்வாறு இயல்பாக இருக்க முடிகிறது? எவ்வாறு பவர் லிப்ட்டிங் விளையாட்டு துறைக்கு வந்தீர்கள்?**

**பிரவீனா :** இந்த மன அழுத்தங்களிலிருந்து வெளிவர நான் உடற்பயிற்சிக்கூடத்தில் (Jym) சேர்ந்தேன், அங்கு செல்லும்வரை நான் உண்மையில் வலிமையானவள் என்று எனக்குத் தெரியாது. அங்கு இருந்தவர்கள் நீ பவர் லிஃப்டிங் செய்யலாமே என்று கூறினார்கள். அப்படித்தான் நான் பவர் லிஃப்டிங்கில் இறங்கினேன். நான் சென்ற ஒரு வருடத்திற்குள் எல்லாம் நடந்து விட்டது. நான் எந்த ஒரு பவர் லிஃப்டிங் தொடர்பான மதிப்பீட்டு முகாம்களுக்கும் (assessment camp) சென்றதில்லை . நான் எந்த ஒரு காரியத்தையும் 100 சதவிகித அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்ய வேண்டுமென்று நினைப்பேன். தொடர்ந்து கடினமாக உழைத்து மாநில அளவில் மாநிலத் தகுதிச் சுற்றுகளை வென்றேன். முதலில் எனது உடல் எடைக்கான பிரிவில் ஒட்டுமொத்த ஜூனியர் பெண்களையும் வென்றேன். மற்ற உடல் எடையில் போட்டியிட்ட மற்ற எல்லா பெண்களையும் விட நான் பலமாக இருந்தேன். என்னால் இன்னும் அதிகமாகச் செய்ய முடியும். நான் எப்பொழுதும் கடினமாக முயற்சி செய்வதை விரும்பினேன், அதன் பிறகு தேசிய அளவில் போட்டிகளுக்குச் சென்றேன். பின்னர் நான் ஆஸ்திரேலியாவுக்கான 43 கிலோவுக்கு கீழ் உள்ள பிரிவில் தேசிய சம்பியன் ஆனேன். இதன் மூலம் மால்டாவில் நடைபெறும் சர்வதேசப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டேன் .ஆனால் என்ன செய்வது. நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி. என்னிடம் பாஸ்போர்ட் அல்லது விசா இல்லாத காரணத்தால் அங்கு செல்ல முடியாது. எங்கள் கனவுகளை எல்லாம் விசா என்ற ஒரு விஷயம் சிதைத்துவிடும். ஆனால் நம்பிக்கையோடு போராட வேண்டும்.




**எதிரொலி : உங்களை நேர்காணல் செய்வதற்கு முன்பு எனக்கு பவர் லிஃப்ட்டிங் பற்றி எதுவும் தெரியாது .அதன் பிறகு இணையத்தில் இருப்பதிலேயே மிகவும் சிரமமான டெட்லிஃப்ட் முறையில் நீங்கள் பல சாதனைகள் செய்திருக்கிறீர்கள் என்பதை அறியமுடிந்தது. இதெற்கெல்லாம் உங்களுக்கு எங்கிருந்து உத்வேகம் கிடைக்கிறது? உங்களுக்கு எப்படி அந்த மன வலிமை கிடைக்கிறது ?**

**பிரவீனா :** நான் கடந்து வந்த போராட்டங்களையெல்லாம் எண்ணும்போது இது ஒன்றும் பெரிய பாரமல்ல என்று நினைக்கிறேன். என் வயதை விட மிக அதிகமான துயரங்களையெல்லாம் கடந்து வந்திருக்கிறேன். என் எடையில் மூன்று மடங்கு அதிகமான டெட்லிஃப்ட்டை தூக்க முடிகிறது. எனது அதிகபட்சசாதனை130கிலோஎடையைத்தூக்கியது. பவர் லிஃப்ட் செய்வதற்கு மிகுந்த மன வலிமை வேண்டும். நான்கடந்து வந்த சோதனைகள் என்னை மனவலிமையுள்ள மனுஷியாக்கியிருக்கிறது என்றே சொல்ல முடியும். ஒவ்வொரு முறை எடையினை தூக்கும் போதும் எங்களை நிராகரித்த ஒதுக்கிய குடியேற்ற அதிகாரிகளுக்கு எனது திறமையை நிரூபிக்கிறேன். எனது வாழ்க்கையில் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்த முயலுகிறேன். இதெல்லாம் எனக்காக மட்டுமல்ல என்னைப்போன்று நிராகரிக்கப்பட்ட ஆயிரமாயிரம் தோழர்கள்/ தோழிகளுக்காக இன்னும் முயற்சிப்பேன். இன்னொரு விஷயத்தை கண்டிப்பாக குறிப்பிட்டே ஆக வேண்டும். எனது மனவலிமை, உத்வேகம், விடாமுயற்சி மற்றும் எனது சாதனைகளுக்கெல்லாம் பக்க பலமாக இருப்பது எனது அம்மா. அவர் மற்றும் எனது குடும்பமே பலம்.

எனது வலிமை என் பெற்றோர் முக்கியமாக என் அம்மாவிடமிருந்து வந்தது என்று நினைக்கிறேன்.

**எதிரொலி : எங்களால் நினைத்துப் பார்க்க முடியாத துயரங்களையெல்லாம் கடந்து வந்திருக்கிறீர்கள். உங்களின் மனவலிமை என்னை வியக்க வைக்கிறது. நீங்கள் குடியுரிமை சார்ந்த பேரணிகள் அனைத்திலும் பங்கேற்பதை நான் பார்த்திருக்கிறேன். உங்கள் பேச்சுகளையும் கேட்டிருக்கிறேன். கண்டிப்பாக ஒரு நாள் உங்களுக்கு விடிவு கிடைக்கும். எல்லோரும் சொல்வதுபோல் “இருண்ட நீண்ட நெடிய பாதையின் முடிவில் கண்டிப்பாக வெளிச்சம் உண்டு” அல்லவா?**

**பிரவீனா :** ஆமாம். அதற்காக மன வலிமையுடன் நான் தொடர்ந்து போராடுவேன். என்றாவது எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்கும் தானே. செவிடராயிருக்கும் அரசியல்வாதிகளின் காதுகளில் எங்கள் குரல் கேட்கும்வரை போராடுவோம். இருண்ட நீண்ட நெடிய பாதையின் முடிவில் கண்டிப்பாக வெளிச்சம் உண்டு.

# தோல்வியை நோக்கி ரிஷி சுனக்!

# பிரிட்டனில் கட்டாய இராணுவ சேவை?



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகில் பல்வேறு நாடுகளில் குறுகிய காலத்திற்கு இராணுவத்தில் சேவை செய்ய வேண்டும் என்ற கட்டாயப் பணி உள்ளது. குறிப்பாக போர்க்காலங்களில் இத்தகைய சட்டம் கட்டாய, ஏன் வலுக்கட்டாய ஆட்சேர்ப்பு என்றே கருத இடமுண்டு.

இத்தகைய நாடுகளில் இராணுவத்திற்கு சேவை செய்வது கட்டாயம் என்பது இங்கே கவனிக்க வேண்டிய ஒன்று. இத்தகைய நாடுகளில், இதற்காக அரசியல் யாப்பு மூலம் சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன.

தற்போது இங்கிலாந்தில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தனது வலதுசாரி கன்சர்வேடிவ் கட்சியினர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், கட்டாய இராணுவ சேவையை (Compulsory Military Service) மீண்டும் கொண்டு வரும் திட்டத்தை பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

### கட்டாய இராணுவ சேவை:

18 வயதுடையவர்கள் முழுநேர இராணுவ வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றக் கோரப்படுவது.

2022இல் ஜேர்மன் அரசியல்வாதிகள் கட்டாய இராணுவ சேவையை புதுப்பிக்க பரிந்துரைத்த அதேவேளையில் லிதுவேனியா 2023 ஒகஸ்ட் மாதம் அதன் வரைவை நீடிக்கும் திட்டங்களை அறிவித்தது. இந்தத்திட்டத்தில் தற்போது டென்மார்க்கும் இணைகிறது.

பிரித்தானிய பொதுத் தேர்தலுக்கு முன்பாக முக்கியமான கொள்கை அறிவிப்பில், கன்சர்வேடிவ் கட்சியின் பிரதம மந்திரி ரிஷி சுனக், 18 வயது நிரம்பியவர்களை 12 மாதங்களுக்கு இராணுவத்தில் கட்டாய சேவை செய்ய உறுதியளித்துள்ளார்.

### இங்கிலாந்தில் ஜூலை 4 பொதுத்தேர்தல்:

தற்போது இங்கிலாந்தில் பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்திய வம்சாவளியான பிரதமர் ரிஷி சுனக் பதவிக்காலம் முடிய உள்ளதால் வருகிற ஜூலை 4 ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு அங்கு அரசியல் கட்சிகள் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் அங்கு தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இந்தநிலையில் பிரதமர் ரிஷி சுனக் கூறுகையில், அடுத்த முறை கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு கட்டாய இராணுவ சேவையை அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளார்.

அதன்படி நாட்டில் உள்ள அனைத்து இளைஞர்களும் ஒரு ஆண்டு முழுநேர இராணுவம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என கூறினார்.

### மீறினால் குற்றவியல் தண்டனை இல்லை:

கன்சர்வேடிவ் அரசாங்க திட்டங்களை மீறிய இளைஞர்களுக்கு குற்றவியல் தடைகள் எதுவும் இருக்காது என்று உள்துறை செயலாளர் கூறியுள்ளார். தற்போதய உலகில் இளம் சமுதாயத்தை ஒன்றிணைக்கவும், இளைஞர்களுக்கு பகிரப்பட்ட நோக்கத்தை அளிக்கவும் இந்தக் கொள்கை உதவும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

கட்டாய இராணுவ சேவைக்கு செல்லாவிடினும், கிரிமினல் வழக்குகள் எதுவும் இருக்கப்போவதில்லை என்றும், இதற்காக யாரும் சிறைக்கு செல்ல மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. பல இளைஞர்கள் தங்கள் சொந்த சமூகங்களுக்குள்ளேயே முடங்கி வாழ்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு மக்களுடன் கலக்கவில்லை என்பது கவலைக்குரியதாகும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

### தொழிற்கட்சி எதிர்ப்பு:

ஆயினும் எதிர்க்கட்சி இந்தத் திட்டங்களை திடமற்றவை என்றும் தேவையற்றவை என்றும் நிராகரித்துள்ளது. தொழிற்கட்சி 'இந்த அரசின் உறுதிமொழி ஒருபோதும் நிறைவேறாது' என்றும் கூறியுள்ளது.

இந்தப் புதிய கட்டாய தேசிய சேவை பிரித்தானிய இளைஞர்களுக்கு வாழ்க்கையை மாற்றும் வாய்ப்பை வழங்கும். அவர்களுக்கு நிஜ உலகத் திறன்கள், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கும் அவர்களின் சமூகத்திற்கும் நமது நாட்டிற்கும் பங்களிப்பதற்கும் வாய்ப்பளிக்கும் எனவும் பிரதமர் சுனக் தெரிவித்துள்ளார்.

### சுவீடனில் கட்டாய சேவை:

2010ம் ஆண்டில் நூறு ஆண்டுகளுக்கு பிறகு, சுவீடன் நாடு கட்டாய இராணுவ சேவையை ரத்து செய்தது. ஆனால் 2017 ஆம் ஆண்டில், அதை மீண்டும் தொடங்குவதற்கு வாக்களிக்கப்பட்டது.

இந்த முடிவிற்குப் பிறகு, ஜனவரி 2018 முதல் ஆண்கள், பெண்கள் என 4000 பேரை கட்டாய இராணுவ சேவைக்கு அழைக்க முடிவு செய்யப்பட்டது.

துருக்கியில் இராணுவ சேவை 20 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்களுக்கும் கட்டாயமாகும். அவர்கள் 6 முதல் 15 மாதங்கள் வரை இராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

துருக்கியின் நீண்ட கால முரண்பாடு கொண்ட கிரிஸில், 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 9 மாதங்கள் இராணுவப் பணி கட்டாயம்.

இதனைப் போலவே ஈரானில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 24 மாதங்கள் இராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாய சட்டமாகும்.

### இஸ்ரேலில் கட்டாய ராணுவ பணி:

பாலஸ்தீன மண்ணில் உருவாகிய இஸ்ரேல் நாட்டிலும் இராணுவத்தில் சேவை செய்வது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாகும். இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையில் ஆண்கள் மூன்று ஆண்டுகளும் பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றுவது கட்டாயம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இஸ்ரேலியக் குடிமக்களுக்கு இந்தச்சட்டம் பொருந்தும்.

அமெரிக்காவின் கண்களில் விரலை விட்டு துருத்திக் கொண்டிருக்கும் கியூபாவில், 17 முதல் 28 வயதுடைய ஆண்கள் இரண்டு ஆண்டுகள் கட்டாய இராணுவ சேவையில் பணியாற்ற வேண்டும் என்பது அரசின் உத்தரவாகும்.

ஐரோப்பிய மண்ணில் சமாதான காலத்திலும் சுவிட்சர்லாந்தில் 18 வயது முதல் 34 வயது வரையுள்ள ஆண்களுக்கு இராணுவ சேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை கடந்த 2013 ஆம் ஆண்டு, சுவிட்சர்லாந்து வாக்கெடுப்பின் மூலம் முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்யப்பட்டது.

### பிரேசிலில் கட்டாய பணி:

இலத்தீன் அமெரிக்க நாடான பிரேசிலில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இராணுவ சேவை கட்டாயம். இந்த கட்டாய இராணுவச் சேவை 10 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும். உடல்நலம் போன்ற காரணங்களுக்காக, இராணுவத்தில் கட்டாயமாக பணியாற்றும் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம்.

அரபு நாடுகளில் குறிப்பாக சிரியாவிலும் ஆண்களுக்கு இராணுவ சேவை கட்டாயம். 2011ஆம் ஆண்டு, அந்நாட்டு அதிபர் பஷர் அல்-அசாத் கட்டாய இராணுவ சேவைக்கான கால அளவை 21 மாதங்களில் இருந்து 18 மாதங்களாகக் குறைக்க முடிவு செய்தார்.

ஆபிரிக்க நாடான எரித்திரியாவிலும் இராணுவத்தில் கட்டாயம் சேவை செய்ய வேண்டும் என்ற சட்டம் உள்ளது. இந்த நாட்டில் ஆண்கள், இளைஞர்கள் மற்றும் திருமணமாகாத பெண்கள் 18 மாதங்கள் நாட்டின் இராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாய சட்டமாகும்.



# எதிர்வரும் ஜீலை முதல் வரும் மாற்றங்கள்

ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் வரி, சட்டம் உட்பட பல துறைகளில் மாற்றங்கள் வரவுள்ளன. அவற்றின் தொகுப்பு வருமாறு,

**குறைந்தபட்ச ஊதியம்**

ஆஸ்திரேலியாவில் குறைந்தபட்ச ஊதியத்தை பெறும் ஊழியர்கள், 3.75 வீத சம்பள உயர்வைப் பெறவுள்ளனர்.

இதன்படி வாரமொன்றுக்கு 31 டொலர் மற்றும் 10 சதங்களை கூடுதலாக பெறவுள்ளனர்.

முழு நேரப்பணியாளருக்கு மணித்தியாலத்துக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த சம்பளமாக 23 டொலர் 23 சதமே இதுவரை காணப்பட்டது. அந்தத் தொகை 24 டொலர் 10 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பள அதிகரிப்புமூலம் 2.6 மில்லியன் பேர் பயன்பெறவுள்ளனர்.

**நலன்புரி**

விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்படுகின்றது. தனி நபர் 1,050 டொலரையும், தம்பதியினர் 1,600 டொலரையும் பெறவுள்ளனர்.

**வரிகள்**

ஜனவரியில் அறிவிக்கப்பட்ட 19 சதவீத வரி 16 சதவீதமாகவும், 32.5 வீத வரி 30 வீதமாகவும் குறைவடையும். 37 சதவீத வரி 120,000 டொலரிலிருந்து 135,000 டொலராக அதிகரிக்கும். 45 சதவீத வரி 180,000 டொலரிலிருந்து 190,000 டொலராக அதிகரிக்கும்.

**விடுமுறை**

குழந்தை பிரசவம், வளர்ப்புக்கு புதிய பெற்றோருக்கு 110 நாட்கள் விடுமுறை வழங்கப்படும். முந்தைய ஆண்டுகளைவிட இது 10 நாட்கள் அதிகமாகும்.

**கடவுச்சீட்டு**

கடவுச்சீட்டுகளை விரைவாக பெறுவதற்குரிய திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி கடவுச்சீட்டு விண்ணப்பக் கட்டணத்துக்கு மேலதிகமாக 100 டொலரைச் செலுத்தி, ஐந்து வணிக நாட்களுக்குள் கடவுச்சீட்டைப் பெறலாம்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் ஒருவர், அதனை 2 வணிக நாட்களுக்குள் பெறும் நடைமுறை ஏற்கனவே உள்ளது. எனினும், இதற்கான கட்டணமாக 252 டொலர் மேலதிகமாக அறிவிடப்படுகின்றது. இந்நிலையிலேயே ஐந்து நாட்கள் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

16 வயதுக்கு மேற்பட்டோருக்கு 10 வருடங்கள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டை பெறுவதற்கு தற்போது 346 டொலர் அறிவிடப்படுகின்றது. இதனை ஐந்து நாட்களுக்குள் பெற விரும்பினால் 446 டொலர்களை செலுத்த வேண்டும். 2 நாட்களில் பெற விரும்பினால் 600 டொலரைச் செலுத்த வேண்டும்.

****

**ஆஸியின் முதல் மூன்று செல்வந்தர்கள்**

ஆஸ்திரேலியாவின் பணக்காரரர்கள் பட்டியலில் தொழிலதிபர் Gina Rinehart தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு 40.6 பில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தைவிட அவரது சொத்து மதிப்பு இம்முறை 3.2 பில்லியன் டொலரால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

Financial Review'sவால் ஆஸ்திரேலியாவின் முன்னணி 10 பணக்காரர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலின் பிரகாரமே இரும்புத் தாது வியாபாரத் துறையில் கொடிகட்டிப் பறக்கும் Gina Rinehart முன்னணியில் உள்ளார்.

தனது சொத்துகளை பல்வகைப்படுத்துவதிலும், விரிவுபடுத்துவதிலும் 70 வயதான அவர் இப்போதும் தீவிரம் காட்டி வருகின்றார்.

மேற்படி பட்டியலில் மெரிட்டன் நிறுவனத்தின் ஸ்தாபகர் Harry Triguboff இரண்டாவது இடத்தில் உள்ளார். 91 வயதான அவரின் சொத்து மதிப்பு 26.5 பில்லியன் டொலராகும். கடந்த வருடத்தைவிட சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது.

மூன்றாவது இடத்தை இருவர் பிடித்துள்ளனர். தொழில்நுட்பதுறை பில்லியனரான, Mike Cannon-Brookes மற்றும் அவரின் முன்னாள் துணைவர் Annie Cannon-Brookes ஆகியோரே மூன்றாவது இடத்தில் உள்ளனர். திருமணமாகி 13 ஆண்டுகள் கழிந்த நிலையில் கடந்த வருடம் இவர்கள் பிரிந்துவிட்டனர். சொத்து மதிப்பு 24.4 பில்லியன் டொலராகும். இவர்களின் சொத்துகள் இன்னும் பிரிக்கப்படவில்லை.

****

பூர்வகுடி மக்களின் இறையாண்மை மதிக்கப்படுவதில்லை எனக்கூறி நீதிமன்றத்தில் முன்னிலையாக மறுத்த பூர்வகுடி மக்களின் செயற்பாட்டாளர் ஒருவருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

81 வயதான ஜிம் எவரட் ( Jim Everett) என்பவருக்கு எதிராகவே இவ்வாறு கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வன எதிர்ப்புப் போராட்டத்தில் அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டு இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை, Hobart நீதிமன்றத்தில் (ஜூன் 04 ஆம் திகதி ) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

இதனையடுத்தே அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பூர்வகுடி மக்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என ஜிம் எவரட் சுட்டிக்காட்டியுள்ளார். தனது போராட்டம் தொடரும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

****

**இரு தசாப்தங்களுக்கு பிறகு முடிவுக்கு வந்த தேடல்!**

இற்றைக்கு 23 வருடங்களுக்கு முன்னர் காணாமல்போன விக்டோரியா ஜீலோங்கைச் சேர்ந்த பெண்ணின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அவர் தொடர்பான தேடுதல் நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது.

கார்மைக்கேலின் என்ற 24 வயதுடைய ஜீலோங்கைச் சேர்ந்த இளம் பெண், 2001 ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி அவர் தங்கியிருந்த Katoomba விடுதியில் இருந்து வெளியே சென்ற பிறகு காணாமல்போனார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, கார்மைக்கேல் கொல்லப்பட்டுள்ளார் என NSW காவல் துறைக்கு தகவல் கிடைத்தது.

இந்நிலையில் 23 வருடங்கள் கழித்து அவரின் எச்சங்கள் Blue Mountain பிரதேசத்தில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக NSW காவல் துறை தெரிவித்தது.

கடந்த 30 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் முறையாக அடையாளம் காணப்பட்டு அவரது குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக காவல் துறை தெரிவித்தது.

****

*உக்ரைனுக்கு மேலும் 31 மில்லியன் டொலரை வழங்குகிறது ஆஸ்திரேலியா!*

உக்ரைன்மீது ரஷ்யா உக்கிரத் தாக்குதலை தொடுத்துவரும் நிலையில், உக்ரைனுக்கு மேலும் 31 மில்லியன் டொலர் உதவிப் பொதியை ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

உக்ரைனின் எரிசக்தி மற்றும் மனிதாபிமான தேவைகளுக்காகவே குறித்த உதவி வழங்கப்படுகின்றது.

உக்ரைனுக்கு நிலக்கரியை அனுப்புவதைவிட எரிசக்தி தேவைப்பாட்டுக்கு நிதி உதவி வழங்கும் முடிவு சிறந்தது என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் மின்உற்பத்தி நிலையங்களை இலக்கு வைத்து ரஷ்யா தாக்குதல் தொடுத்து வருகின்றது. இந்நிலையில் ஆஸ்திரேலியாவிடம் உக்ரைன் நிலக்கரி உதவி கோரி இருந்தது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததில் இருந்து ஆஸ்திரேலியா 70 ஆயிரம் டொன் நிலக்கரியை உக்ரைனுக்கு வழங்கியுள்ளது.

ஐரோப்பாவில் குளிர்காலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் வெப்பமேற்றம் மற்றும் மின் தேவைக்காக ஆஸ்திரேலியாவால் வழங்கப்படும் நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

****

**'இனப்படுகொலை விவகாரம்' - லேபர் கட்சி எம்.பி. இராஜினாமா**

இஸ்ரேல் அரசின் இனப்படுகொலையை கண்டிக்க மறுக்கும் லேபர் அரசுடன் முரண்பட்டுவந்த அந்தக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரான Fatima Payman, வெளிவிவகாரக் குழுக்களில் இருந்து தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

லேபர் அரசும், அதன் சகாக்களும் சரியான பக்கத்தில் நிற்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேல் இனப்படுகொலை செய்வதாகவும், இதனை தடுத்து நிறுத்துமாறு ஆஸ்திரேலியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் Fatima Payman வலியுறுத்தி வந்தார். எனினும், அவரின் அந்த கருத்து தொடர்பில் பிரதமர் உள்ளிட்ட லேபர் கட்சி முக்கியஸ்தர்கள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே முக்கியமான இரு வெளிவிவகாரக் குழுக்களில் இருந்து Fatima Payman பதவி விலகியுள்ளார்.

ஆஸ்திரேலியா பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

# ஒடுக்கப்பட்டோருக்காக உயரும் குரல்

**சியாமளா யோகேஸ்வரன்**

**ஜொனதன் சிறீரங்கநாதன்.**

**மனித நேயமும் சமுதாய அக்கறையும் கொண்ட ஒரு அரசியல்வாதியாக குயின்ஸ்லாந்து கபா (Gaba) பிரதேசசபையின் 'கவுன்சிலர்' பதவியில் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து சேவை ஆற்றியவர். இந்த ஆண்டு பிறிஸ்பேன் நகரசபைக்கான நகர பிதா பதவிக்காகக் கிறீன்கட்சியின் சார்பில் போட்டியிட்ட அவருடனும் அவருடைய தந்தையுடனுமான நேர்காணல் இது.**

**அவர்களுடனான உரையாடலை அப்படியே பதிவு செய்தால், ஜொனதனின் உண்மையான நிலையைப் பதிவு செய்ய முடியாது என்பதால் கேள்வி பதில் என்பதாக இல்லாமல் அவர்களிடமிருந்து பெற்ற விடயங்கள் கட்டுரை வடிவில் வாசகர்களுக்குத் தரப்படுகின்றது.**



ஜொனதனின் தந்தை ஸ்ரீரங்கநாதன் இலங்கையைச் சேர்ந்த தமிழர். அதனாலேயே தமிழின் மீது இயல்பான பற்றுக் கொண்ட ஜொனதன் ஒவ்வொரு வருடமும் பிறிஸ்பேன் தமிழ்ப் பாடசாலைக் கலை விழாவில் தவறாமல் கலந்து கொண்டு அவரது எளிமையான பேச்சின் மூலம் பலரின் மனதை வென்றிருக்கின்றார். அத்துடன் சிறுவர்களினதும் இளைஞர்களினதும் ஒரு முன்மாதிரியான தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றார். 'ஜொனதன் ஸ்ரீ' என்று எல்லோராலும் இலகுவாக அழைக்கப்படுவதற்காகச் சுருக்கித் தன் பெயரைப் பதிவு செய்திருந்தவர், தமிழ்மொழியின் மீது கொண்ட பற்றுக் காரணமாகவும், மற்றவர்களுக்காகத் தந்தையின் பெயரைச் சுருக்கிக் கொள்ளக் கூடாது என்பதாலும் தன் பெயரை ஜொனதன் ஸ்ரீரங்கநாதன் என்று முழுமையாகப் பின்னர் மாற்றிக் கொண்டார்.

ஜொனதனின் தந்தையான ஸ்ரீரங்கநாதன், இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து இலண்டனில் பத்து வருடகாலங்கள் வாழ்ந்த பின்னர் காதல் மனைவியுடன் அவுஸ்ரேலியாவுக்கு குடிபெயர்ந்தார். ஆஸிக்கு அவர்கள் வந்து இப்போது 35 வருடங்கள் கடந்துவிட்டன. அவுஸ்திரேலியாவுக்கு வந்த பின்னர்தான் ஜொனதன் ஸ்ரீரங்கநாதன் தம்பதியருக்குப் பிறந்தார். தந்தை ஸ்ரீரங்கநாதன் குடிவரவுத் திணைக்களத்திலும், தாயார் ஆசிரியராகவும் பணிபுரிந்து இப்போது ஓய்வுபெற்று விட்டனர்.

ஜொனதன் பன்னிரண்டாம் வகுப்பில் அதி சிறப்புத்தேர்ச்சி பெற்றதோடு, அரசியலிலும் ஆர்வம் கொண்டவராக இருந்ததால் தந்தையின் வழிகாட்டலுடன் சட்டத்துறையைத் தெரிவு செய்து கற்றார். அன்னையுடன் டார்வினில் இருந்த போது, இந்நாட்டின் பூர்விகக்குடிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி நேரில் பார்த்து அறிந்து கொண்டார். அவர்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமாயின் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பதை அப்போதுதான் ஜொனதன் புரிந்து கொண்டார். அத்துடன் கொழும்பில் வாழும் ஜொனதனின் அத்தை , இலங்கையில் தமிழர் படும் அவலங்களைப் பற்றிப் பேசிய போதெல்லாம் அரசியலில் ஈடுபடுவதன் மூலம் தன்னால் முடிந்த உதவியைத் தமிழர்களுக்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் ஜொனதனுக்கு ஏற்பட்டது.

இப்போது புலம்பெயர்ந்து வந்த ஈழத்தமிழர்களுக்கு புகலிட உரிமை பெற்றுக் கொடுப்பதற்கான செயல்களிலும், போராட்டங்களிலும் ஈடுபடுவதுடன் பல்கலைக்கழகங்களில் நிகழும் முள்ளிவாய்க்கால் போன்ற நினைவேந்தல் நிகழ்வுகளிலும் பங்கேற்று வருகின்றார் ஜொனதன்.

வளர்ந்த சூழலின் பாதிப்பின்றி, குடும்பப் பாசம் நிறைந்தவராக மனிதாபிமான சிந்தனைகள் நிறைந்தவராக ஜொனதனை அறிந்திருந்ததால் எவ்வாறு ஒரு மனித நேயமுள்ள மனிதராக வளர்த்தீர்கள் என்ற கேள்வியை ஜொனதனின் தந்தையிடம் கேட்டேன்.

தாய் ஆசிரியராக இருந்தமையால் அவரை ஒழுக்க நெறி கொண்டவராக வளர்த்ததாகவும், தமிழ்ப்பண்பாடுகள் பற்றிச் சொல்லிக் கொடுத்து வளர்த்தமையால் நற்குடிமகனாக வளர்ந்திருக்கின்றான் என்றும் மகனைப் பற்றிக் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டார் தந்தை.

ஜொனதன் குடும்பத்தினரிடம் அன்பும் அக்கறையும் கொண்டவர் . தங்கை மீது எப்போதும் பரிவு காட்டுபவர் ஜொனதன். ஒருநாள் கோழி, ஆடுகளை எப்படிக் கொன்று அவற்றின் இறைச்சியை விற்பனைக்குக் கொண்டு வருகின்றார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட ஜொனதன், அன்றுடன் மாமிசம் சாப்பிடுவதையே விட்டு விட்டார் .

கவுன்சிலராக இருந்த போது வீட்டுப் பிரச்சினைகள் பற்றியும் வீடில்லாமல் தெருவில் வாழ்பவர்களின் துயரங்கள் பற்றியும் ஜொனதன் நன்கு அறிந்தவர் என்பதால் , வாழ்வதற்கு தலைக்கு மேல் கூரை ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை நன்றாக உணர்ந்திருந்தார் . அதனால் வாழ்விடத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அதே போன்று அகதிகள் என்ற பெயருடன் நான்கு சுவருக்குள் அடைத்து வைத்து விட்டு தேவையானவற்றை வழங்குகின்றோம் என்று அரசாங்கம் சொல்வதனை ஏற்றுக் கொள்ளாமல், கூண்டில் வாழும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான சுதந்திர வாழ்வுக்காக அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார். அதனால் ஜொனதன் கைதாகியிருந்தாலும் அகதிகளின் விடுதலை சாத்தியமாகி இருக்கின்றது . இயற்கையிலும் அதன் சமநிலையிலும் அக்கறை கொண்டவர் என்பதால் தெருவை நிறைக்கும் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் சூழல் மாசடைதலைத் தவிர்க்க, துவிச்சக்கர வண்டிப்பாதையையும் பேருந்துப் பாதையையும் அதிகரிக்க வேண்டும் என்றும் ஜொனதன் போராடி வருகின்றார்.

ஜொனதன் வார்த்தைகளில் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்காமல் சொல்வதைச் செயலிலும் காட்டுபவர் என்பதால் அவரைத் துவிச்சக்கரவண்டியில் அடிக்கடி காணக் கூடியதாக இருக்கும். இதனை அனைவரும் அறிவர்.

குற்றச்செயல்கள் பெருகுகின்றன என்றால் முதலில் அதற்கான மூலத்தைக் கண்டு பிடித்துத் தீர்வு காண வேண்டுமே தவிர மேலெழுந்தவாரியாக தீர்வுகளைக் காணக் கூடாது என்பதை ஜொனதன் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்துபவர். வீடுகளை உடைப்பவர்கள், கடைகளில் திருடுபவர்களின் அடிப்படைப் பிரச்சனையை அறிந்து கொண்டு அதைத் தீர்க்க முயல வேண்டும் என்று சமுதாய அக்கறையுடனும் பேசுபவர்.

ஜொனதன் பிறிஸ்பேன் நகர ஆளுனர் பதவிக்காகப் போட்டியிடுகின்றார் என்றவுடன் அவருக்கு மக்களிடைய இருந்த செல்வாக்கு, எதிர்க்கட்சிக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அதனாலேயே எதிர்க்கட்சியானது அவருக்கெதிரான பிரசாரங்களை அனைத்து சமூக ஊடகங்களிலும் முடுக்கி விட்டிருந்தது. ஆளும் கட்சிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை விட ஜொனதனுக்கு எதிரான பிரசாரத்துக்காகவே பெரும் தொகையான பணத்தை எதிர்க்கட்சியானது செலவழித்திருந்தமை ஜொனதனின் செல்வாக்கையும் வளர்ச்சியையும் காட்டுகின்றது என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் இருக்கும் அரசியலுக்கும் வளர்ச்சியடைந்த நாகரிகமான நாடான அவுஸ்திரேலிய நாட்டு அரசியலுக்கும் என்ன வேறுபாடு என்று பெரும் எதிர்பார்ப்புடன் அடுத்த கேள்வியைக் கேட்டேன். கிடைத்த பதில் என்னை மௌனியாக்கியது. இரண்டுமே கிட்டத்தட்ட ஒன்றுதான் என்று குறிப்பிட்டவர் அங்கு போல இங்கு உடல் ரீதியாகத் தாக்குதல் நடக்காவிடினும் உளரீதியாகத் தாக்கி, ஒரு மனிதனின் தன்னம்பிக்கையைச் சிதைத்து விடுவது போன்ற கேவலமான பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன என்றார் ஜொனதனின் தந்தை.

இனரீதியாக ஏதாவது பாகுபாடு காட்டப்படுகின்றதா என்ற எனது அடுத்த கேள்வியும் பெரும் எதிர்பார்ப்புடனேயே கேட்கப்பட்டது.

நிச்சயமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டவர், உனது நாட்டுக்கே திரும்பச் சென்று விடு! வெள்ளையல்லாதவனுக்கு வாக்களிக்கக் கூடாது! இவன் இங்கு வாழத் தகுதியற்றவன்! என்பது போன்ற ஜொனதனுக்கு எதிரான கருத்துக்கள் ஊடகங்களில் மலிந்து காணப்பட்டன என்று வேதனையுடன் குறிப்பிட்டார் அவரது தந்தை.

'மகனுக்கான பிரசாரங்களில் குடும்பமாக ஈடுபட்டு, மகனின் வெற்றிக்காக உழைத்தும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை என்பதை விட, இன்று வரையில் சொந்தமாக வீடு ஒன்று வாங்காமல் படகு வீடொன்றில் ஜொனதன் குடியிருக்கின்றார். கிடைக்கும் சம்பளத்தில் பாதிக்கு மேல் தர்ம காரியங்களுக்காகக் கொடுத்து விடுகின்றார்' என ஒரு தந்தையாக வேதனையுடன் குறிப்பிட்டார்.

பாலஸ்தீனியத்தில் நடக்கும் சண்டை பற்றியும் அநியாயமாக அப்பாவி உயிர்கள் பலியாவது பற்றியும் தன் துயரையும் பகிர்ந்து கொண்ட ஜொனதன், அதிகரித்து விட்ட தொழினுட்ப வசதிகளால் படுகொலைகள் பற்றிய படங்களும் படப்பதிவுகளும் இப்போது வெளியில் வந்து பாலஸ்தீனத்தின் நிலையை உலகுக்குப் புரிய வைக்கின்றன என்றும் ,இதே போன்ற படுகொலைகள் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த போது அவை எதுவுமே வெளியில் தெரிய வரவில்லை என்றும் வருத்தப்பட்டார். படுகொலைகள் பற்றி உலக நாடுகள் மௌனமாக இருக்கின்றமை பற்றிய தன் வேதனையையும் பகிர்ந்து கொண்டார்.

முன்னைய தேர்தலில் 5.2%ஆக இருந்த வாக்குகள் இம்முறை 23 சதவீதமாக அதிகரித்ததை ஒரு வெற்றியாகவே கருத வேண்டும் என்று குறிப்பிட்டவர் தோல்விக்கான காரணங்கள் பற்றிக் கேட்ட போது, 'கவுன்சிலராக இருந்த போது எனது உண்மையான முகத்தை எல்லோரும் அறிந்திருந்தார்கள். ஆளுநருக்காகப் போட்டியிட்ட போது பிரதான கட்சிகளின் போலிப்பிரசாரங்கள் என்னைப் பற்றிய ஒரு பொய்யான விம்பத்தை உருவாக்கி அதுவே உண்மை என்று மக்களின் மனதில் பதிய வைத்து விட்டன' என்று கூறினார்.

ஜொனதன் ஆளுநராக வந்தால், வீட்டை உடைத்துக் கொள்ளையடிப்பது எப்படி என்று கற்றுக் கொடுப்பார், கார் ஓட்டுவதற்கான பதிவுக்கட்டணம் முதல் மற்றைய வரிகளையும் செலவீனங்களையும் கூட்டுவார், சைக்கிள்களில் பயணம் செய்ய வேண்டி வரும், வீட்டுப்பிராணிகளை பதிவு செய்ய அதிக பணம் கொடுக்க வேண்டும், பிரதான நேரத்தில் இவர் முன்னெடுக்கும் போராட்டங்களால் வாகன நெரிசல் அதிகரிக்கும், வாகனங்களை ஓட்டும் வேகம் 30 ஆகக் குறைக்கப்படும். குப்பைகள் ஒழுங்காக எடுக்கப்படமாட்டாது, குழப்பவாதியின் அரசியலாக இருக்கும் போன்ற திரிபுபட்ட பிரசாரங்களுக்கு அதாவது அவரது குணநலனுக்கு முற்றிலும் முரணான பிரசாரங்களுக்கு 2 மில்லியன் டொலர் வரையில் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியான பிரசாரங்கள் சமூக ஊடகங்களில் அடிக்கடி வரும் போது, யாருக்கு வாக்களிப்பது என்ற தெளிவில்லாதவர்கள் இலகுவாகக் குழம்பி விட்டார்கள் என்றும் அதை முறியடித்து பிரசாரம் செய்ய தம்மிடம் ஊடகவசதியோ, பணவசதியோ இருக்கவில்லை என்றும் ஜொனதன் குறிப்பிட்டார். தனது பிரசாரத்துக்காக $7000 வரையில் மட்டுமே செலவழித்ததாகவும், அதனால் பொய்ப்பிரசாரங்களைத் தம்மால் முறியடிக்க முடியவில்லை என்றும் ஜொனதன் குறிப்பிட்டார்.

'நகரப்பகுதிகளில் தமக்கு அதிகளவில் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்த்த வாடகைக்குக் குடியிருப்போரும், இளைஞர்களும் வாக்களிப்பதில் பெரும் ஆர்வம் காட்டவில்லை. இளைஞர்களில் இங்கு குடி வந்தோரோ அல்லது குடிபெயர்ந்து வேறு மாநிலங்களுக்குச் சென்றோரோ, அதைப்பற்றிய பதிவுகளைச் செய்து வாக்களிக்கவில்லை 'என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கிறீன் கட்சியினர் அறிமுகமில்லாத இடங்களில் விருப்பு வாக்குகள் யாவும் லேபருக்கே கிடைத்தன. அந்த இடங்களில் நான் பிரசாரம் செய்யத் தவறி விட்டமையும் தோல்விக்கான காரணமாக இருக்கலாம். வீட்டுக்கு வீடு சென்று பிரசாரம் செய்ய மட்டுமே என்னால் முடிந்தது. அதுவும் வெல்லக்கூடிய இடத்தில் நான் அதிக நேரத்தைச் செலவழித்து விட்டேன்.

தேர்தலன்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தபோது, எனது எதிர்காலத் திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா என்று வாக்காளர்கள் சிலரிடம் கேட்டேன். அப்போது "உங்களைப் பற்றி மிக நன்றாகவே தெரியும், அதை உம் வாயால் மீண்டும் கேட்க வேண்டியதில்லை" என்று மனதைக் காயப்படுத்தும் விதமாகப் பலர் சொன்னது வருத்தத்தைக் கொடுத்தது" என்று வேதனையோடு அவர் கூறினார்.

ஊடகங்கள் நினைத்தால் ஒரு மனிதனைக் கேவலமாகச் சித்திரிக்க முடியும் என்பதற்கும் பலம் வாய்ந்த கட்சிகள் தமது வெற்றிக்காகக் கீழ்த்தரமான காரியங்களிலும் ஈடுபடக்கூடும் என்ற உண்மைக்கும் ஜொனதனின் வெற்றி பலியாகி இருக்கின்றது என்றுதான் கூற வேண்டும்.

மனவேதனையினால் தூக்கத்தில் பற்களை நறநறுக்கின்றீர்கள் என்று பல் வைத்தியர் சொல்லியிருப்பதும் , எப்படி இருக்கின்றாய் என்ற நண்பர்களின் பதிலுக்குப் பொய்யைச் சொல்ல முடியாமல் மௌனமாக இருப்பதையும் ஜொனதன் குறிப்பிட்டது சொல்லாத பலகதைகளைச் சொன்னதாகவே எனக்குப் பட்டது.

எதிர்காலத்திட்டங்கள் என்று குறிப்பிடும் போது, இளைஞர்களை சரியான பாதையில் வழி நடத்த பணம் ஒதுக்கப்பட வேண்டும், இளைஞர்களின் குற்றச்செயல்களை அடக்க நியாயமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், சரியான வீடமைப்புத் திட்டங்கள் உருவாக வேண்டும், குதிரையோட்ட மைதானங்கள் மக்களுக்காக ஒதுக்க வேண்டும், சூதாட்டம் ஒழிக்கப்படவேண்டும், அநியாய வாடகை உயர்வுகள் நிறுத்தப்பட வேண்டும், கார்ப்பாதைகளை விட பேருந்துப்பாதைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்பது போன்ற சூழலுக்கும் சமூக நலனுக்குமான திட்டங்களை வைத்திருக்கும் ஜொனதன் இப்போது சிறிது ஓய்வெடுத்துக் கொண்டாலும் ஒரு நல்ல மனிதன் நாளைய தலைவனாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் இருக்கின்றது.

அரசியல் பற்றித் தெரிந்து கொண்டவர், இப்போது அனுபவத்தால் அதன் நெளிவு சுழிவுகளைப் பற்றியும் தெரிந்து கொண்டு விட்டிருப்பதால் அதற்கேற்ற மன உறுதியுடன், இளைஞர்களை ஒருங்கிணைத்து இன்னமும் முனைப்புடன் புது யுகமொன்றைப் படைக்கத் தயாராவார் என்ற நம்பிக்கையுடன் ஜொனதனுக்கு எங்கள் வாழ்த்தையும் கூறுவோம்

# தமிழ்த்தேசியம்; பலமா? பலவீனமா?

● கருணாகரன்

தமிழ்த்தேசியம் பலமாக உள்ளதா? பலவீனப்பட்டுள்ளதா? பலவீனப்படுத்தப்படுகிறதா? இந்த இரண்டு கேள்விகளும் இன்றைய ஈழத்தமிழரின் அரசியலில் முக்கியமானவை.

மறுபக்கத்தில் தமிழ்த்தேசியம் தவறானது, அது அவசியமற்றது. அதனால் தமிழ்ச்சமூகத்திற்குப் பின்னடைவும் பாதிப்புமே உண்டு என்ற கருத்தியலும் உண்டு.

இவற்றை உள்ளடக்கி விவாதிக்கும் வகையில் இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

### 1. தமிழ்த்தேசியம் பலமாக உள்ளதா?

இதை இரண்டு வகையில் நோக்க வேண்டும்.

அ) தமிழ்த்தேசியக் கருத்தியல் நிலை அல்லது தமிழ்த்தேசிய உணர்வு நிலை.

தமிழ்த்தேசியக் கருத்துநிலையும் உணர்வும் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியே புலம்பெயர்ந்த தமிழர்களிடத்திலும் தமிழ்நாட்டிலும் ஆழமாகவே உண்டு. இதற்குக் காரணம், பிறமொழியினர், பிற ஆட்சியதிகாரத் தரப்புகள் தமிழர்கள் மீது மேற்கொள்ளும் - மேற்கொள்ள முயற்சிக்கும் - ஆதிக்கம் அல்லது ஒடுக்குமுறையே ஆகும். ஒடுக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க தேசியவாத உணர்வு மேலோங்குகிறது. தேசியவாதத்தின் ஓரம்சம் இதுவாகும்.

கூடவே, தமிழர்கள் சமூக, பொருளியல், அரசியல் சிக்கல்களிலிருந்து தம்மைத் தாமே விடுவித்து, தம்மை நிலைப்படுத்திக்கொள்ளும் நோக்கில் உருவாகிய கருத்தியல் இது என்பதால், அந்தச் சிக்கல்களும் பிரச்சினைகளும் தீரும் வரையில் இது பலமாகவே இருக்கும்.

ஆகவே தமிழ்த்தேசியம் என்பது இனவிடுதலைக் கொள்கையாகவும், அதற்கான திரட்சியைக் கொள்வதாகவும் உள்ளது. இது தமிழர் செறிந்து வாழும் நிலப்பரப்பு, மொழி, சமூகம் ஆகியவற்றைப் பலமானமுறையில் இணைப்பதற்கான ஒரு கோட்பாடாக வளர்ச்சியடைந்திருக்கிறது. சுருக்கிச் சொன்னால், தமிழ்த்தேசியம் என்பது தமிழர்கள் தங்களைப் பல வகையிலும் ஒரு தேசிய இனமாகத் திரட்டி, சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் வலுப்படுத்திக்கொள்வதற்கான ஒரு கருத்தோட்டம் எனலாம். இன்று இது இன்னொரு பரிமாண நிலையில் மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட தமிழ்கள் பெயர்ந்து திரட்சியாக வாழும் நாடுகளில் உணர் நிலையிலும் வெளிப்பாட்டு நிலையிலும் உள்ளதையும் கவனித்துப் பேசுமளவுக்குள்ளது. இந்தச் சுருக்கக் கட்டுரையில் அதற்கான சாத்தியமில்லை.

“தமிழ்த்தேசியம்” என்ற சொல்லை அறிமுகமாக்கி, அந்தக் கருதுகோளை தமிழ்ப்பரப்பில் முதலில் விரித்தவர், “சிலம்புச் செல்வர்” என்று அழைக்கப்படும் ம.பொ.சிவஞானம். 1940 களின் முற்பகுதியில் அவர் சென்னையில் தன்னுடைய “தமிழ் முரசு” என்ற பத்திரிகையில் இதைக்குறித்து விளக்கி எழுதினார். தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களை - தமிழக மக்களை மையமாகக் கொண்டே முதலில் இவ்வாறு சிந்திக்கப்பட்டது. இதற்காக ம.பொ.சி, 1946 இல் “தமிழரசுக் கழகம்” என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். அந்த உணர்வு நிலை வளர்ந்து 1969 இல் தமிழ்நாடு என்ற உருவாக்கமாக வெற்றியடைந்தது. இதில் பெருஞ்சித்திரனாரின் பங்களிப்பும் முக்கியமானது. இதற்குள்ளான பெண் விடுதலை, சாதியப் பிரச்சினைகளை (தலித்தியம்) எப்படிக் கையாள்வது என இதற்குள் மேற்கொள்ளப்பட்ட பல விதமான உரையாடல்களும் போராட்டங்களும் கவனத்திற்குரியன.

இலங்கையில் தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட விலக்கல்களும் ஒடுக்குமுறையும் தமிழ்த்தேசிய உணர்வையும் தனிநாட்டுக் கோரிக்கையையும் உருவாக்கியது. தமிழகச் சூழலை முன்னுதாரணமாகக் கொண்டு, “இலங்கைத் தமிழரசுக் கட்சி” 1949 இல் ஆரம்பிக்கப்பட்டது. மொழிவாரி மாநிலமாக “தமிழ்நாடு” உருவாகியதை அடிப்படையாகக் கொண்டு “தமிழீழம்” என்ற தனிநாட்டுக் கோரிக்கை உருவாகியது. பதிலாக தமிழ்த்தேசிய உணர்வையும் அதன் சமூகத் திரட்சியையும் இலங்கை அரசாங்கம் கடுமையான முறையில் ஒடுக்கியது. சட்டத்தின் மூலமும் படைகளின் மூலமும் இந்த ஒடுக்குமுறை தீவிரப்படுத்தப்பட்டது. ஒடுக்குமுறை தீவிரப்படுத்தப்பட தமிழ்த்தேசிய உணர்வும், தமிழ்த்தேசிய உணர்வின் அடிப்படையில் தமிழின விடுதலைப் போராட்ட உணர்வும் மேலோங்கியது.

இன்று ஈழத்தில் தமிழ்த்தேசியம் என்பது தமிழர்களின் கூட்டுளம், சமூகத்திரட்சி, இனவிடுதலை போன்றனவற்றை உள்ளடக்கி நிற்கிறது. இந்த உணர்வு (தமிழ்த்தேசியம்) உலகளாவிய அளவில் தமிழர்களைப் பெரும்பாலும் ஒருங்கிணைக்கும் ஒன்றாகவும் மாற்றமடைந்திருக்கிறது.

சிங்களப் பெருந்தேசியவாத ஒடுக்குமுறையே தமிழ்த் தேசியவாதச் சிந்தனையை வலுப்படுத்தி, அதைத் திரட்சியடைய வைத்துள்ளது. ஒடுக்குமுறை தீவிரமடையத் தீவிரமடைய தமிழ்த்தேசிய உணர்வும் கருத்துநிலையும் மேலும் மேலும் வலுப்பெற்றுக்கொண்டேயுள்ளது. இன்று ஈழத்தமிழ்ப்பரப்பில் உள்ள பெரும்பாலான ஊடகங்களும் அரசியற் கட்சிகளும் மக்களின் வாக்களிப்பு வீதமும் இதை உறுதியுரைக்கின்றன.

ஆகவே, தமிழ்த்தேசியக் கருத்தியலும் உணர்வும் வலுவானதாக உள்ளதென்றால், அது சிங்களப் பெருந்தேசியவாத ஒடுக்குறையின் விளைவினாலேயாகும்.

ஆ. தமிழ்த்தேசியக் கருத்தை - உணர்வை முன்னிறுத்திச் செயற்படும் - செயற்படுத்தப்படும் அரசியல்.

தமிழ்தேசியக் கருத்தை - உணர்வை முன்னிறுத்திச் செயற்படும் அரசியல் தமிழ் நாட்டில் ஹிந்தி எதிர்ப்புத் தொடக்கம், மத்தியின் ஆதிக்கத்தை எதிர்ப்பது வரையில் உள்ளது. சமவேளையில் கன்னட, மலையாளத் தரப்புகள் என அயலிலிருந்து ஏற்படும் நெருக்கடிகளைத் தீவிரமாக எதிர்க்கும் ஒன்றாகவும் - அவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதாகவும் இருக்கிறது. கூடவே தமிழ்நாடு தன்னை சமூக, அறிவியல், பொருளாதார, பண்பாட்டம்சங்களில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது. அதன்மூலம் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் முற்படுகிறது.

இலங்கையில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை எதிர்ப்பதாக மட்டுமே இது தொழிற்படுகிறது. ஒரு கட்டத்தில் அது ஆயுதப்போராட்டமாகவும் விரிவடைந்தது. ஆயுதப்போராட்டத்தில் அது பன்முகத்தன்மையையும் செயற்பாட்டு வீரியத்தையும் கொண்டிருந்தது. ஆகவே இந்தக் காலப்பகுதியில் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துநிலையாகவும் போராட்டவடிவமாகவும் இருநிலைகளில் இயங்கியது. பின்னர் இந்த அடிப்படையில் பல கட்சிகள் தோற்றம் பெற்றன. ஆனால், இவை உரிய முறையில் இவற்றைப் பாதுகாக்கும் - வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை.

இப்பொழுது இவை, தமிழ்த்தேசியத்தின்பால் பற்றுக் கொண்டவர்களைக் கொண்டாடுதல், அந்தப் பற்றோடு போராடி மரணத்தைத் தழுவிக் கொண்டோரைப் போற்றுதல், வழிபடுதல் எனத் தொடங்கி, மொழி, நிலம், பண்பாடு ஆகியவற்றை முன்னிறுத்தி அரசியல் உணர்வூட்டத்தைச் செய்தலாக மட்டுமே நிகழ்த்துகின்றன. மேலும் தமிழ்த் தேசியக் கருத்துநிலையைத் தொடர்ச்சியாகப் பேசுதல், இனரீதியாக அடையாளப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறையைத் எதிர்க்க முற்படுதல், அதை வெளிப்படுத்துதல் என இது நீள்கிறது. ஆனால், இதற்கான வலுவான செயற்கட்டமைப்புகளும் வலுவான எதிர்ப்பு வடிவங்களும் எதிர்ப்பு நிலைகளும் திரட்சித் தன்மையும் இன்றில்லாது போய்விட்டன. இதைப்பற்றிய ஆய்வுகளும் விமர்சனங்களும் உரையாடல்களும் இல்லாதொழிந்து விட்டன. முன்வைக்கப்படும் விமர்சனங்களையும் கவனப்படுத்தல்களையும் திறந்த மனதோடு ஏற்கும் நிலையில்லை. அப்படி விமர்சனங்களை முன்வைப்போரை எதிர்நிலையாளர்களாக நோக்கும் நிலையே வளர்ந்துள்ளது. இதனால், வெளிவிரிய வேண்டிய தமிழ்த்தேசியமானது, உட்சுருங்கும் தமிழ்த்தேசியமாகியுள்ளது.

### 2. தமிழ்த்தேசியம் பலவீனப்பட்டுள்ளதா?

மக்களின் உணர்வு நிலையில் தமிழ்த்தேசியக் கருதுகோள் பலவீனப்பட்டுள்ளதாகக் கருதமுடியாது. தேர்தல்களின்போது தமது கூட்டுணர்வை தமிழ்த்தேசிய அடையாளத்தின்பாற்பட்டே அநேகமாக வெளிப்படுத்துகின்றனர். இந்த அடிப்படையில் ஒடுக்குமுறை அரசையும் சிங்களப் பேரினவாதச் சிந்தனையையும் எதிர்த்தே கடந்த 70 ஆண்டுகளாக மக்கள் போராடியிருக்கிறார்கள். ஆகவே தமிழ்த்தேசியம் மக்கள் தளத்தில் பலவீனப்பட்டுள்ளதாகச் சொல்ல முடியாது. அரச ஒடுக்குமுறை இல்லாதொழிந்தால் இந்த நிலையில் மாற்றம் நிகழலாம்.

ஆனாலும் தமிழ்த்தேசியம் என்ற அடையாளத்தோடு மேற்கொள்ளப்படும் தமிழ் அரசியலின் பலவீனத்தையும் அது சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் மந்த நிலையைப் பராமரிப்பதையும் கண்டு மக்கள் அதிருப்தியடைகின்றனர். நிலம் சுருங்கி வருவதையிட்டும் மக்களுக்குக் கவலையுண்டு. ஒன்றாகத் திரட்சியடைந்து நின்று விடுதலை அரசியலை மேற்கொள்ள வேண்டிய அரசியற் சக்திகள், கட்சிகளாகப் பிளவுண்டு தேர்தல் அரசியலில் சிக்கிச்சிதறிக் கிடப்பதையிட்டு மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்த்தேசியம்; பலமா? பலவீனமா?

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கட்சிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பிரகடனப்படுத்திய எதையும் கடந்த காலத்தில் நிறைவேற்றத் தவறியதும் மக்களுக்கு நம்பிக்கையீனத்தை உண்டாக்கியிருக்கிறது. இது தமிழ்த்தேசியத்தின் சரிவைச் சந்திக்கும் அபாயநிலையே.

அத்துடன், சாதிய விடுதலை, பெண்ணுரிமை போன்றவற்றைச் சரியான முறையில் - பிரயோக முறையில் - தமிழ்த்தேசியம் தனக்குள் கொள்ளவில்லை. முஸ்லிம்கள், மலையக மக்கள் உட்படப் பிற சமூகத்தினருடனான உறவாடலுக்கான விரிபரப்பை இலங்கைத் தமிழ்த்தேசியம் கொள்ளத் தவறியுள்ளது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அயோத்திதாசப் பண்டிதர் முதன்முதலில் தமிழ்த்தேசிய அடையாளங்களின் தொடக்கப்படிவுகளைக் கண்டடைந்திருந்தார். 'தமிழன்' என்ற தேசிய இனப்பெயரை - அடையாளத்தை அதற்கான அரசியல் சமூகப் பொருளோடு பயன்படுத்திய முதல் தமிழ்ச் சிந்தனையாளரும் அயோத்திதாசப் பண்டிதரே. அப்பொழுது அவர் வலியுறுத்தியது, சாதியைக் கடக்காமல் தமிழர்கள் இன ஓர்மைகொள்ள முடியாது என்பதாகும். அதற்குப் பிறகு நூற்றாண்டு கடந்து விட்டது. ஆனாலும் நிலைமையில் பெரிய மாற்றங்கள் இல்லை. இதுவும் தமிழ்த் தேசியம் பலவீனமடைவதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

### 3. தமிழ்த்தேசியம் பலப்படுத்தப்படுகிறதா?

தமிழ்த்தேசியத்தையும் அதற்கான அரசியலையும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை இன்றைய தமிழ் அரசியற் சக்திகளோ, அவற்றை வலியுறுத்தும் அமைப்புகளோ முன்னெடுக்கவில்லை. அல்லது அதில் நிறையப் போதாமையுண்டு. தமிழ்த்தேசியம் என்ற கருதுகோளைப் பலப்படுத்த வேண்டும் என்றால், அதற்கான செயலூக்கமுள்ள செயற்றிட்டங்களும் செயற்பாடுகளும் தேவை. அவை எதுவும் இன்றுவரை வரையப்பட்டுச் செயற்படுத்தப்படவில்லை. உள்ளார்ந்த உரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். சுய விமர்சனத்துக்கு இடமளிக்கப்படுவது அவசியம். மெய்யான அர்த்தத்தில் வலுவான தமிழ்த்தேசியம் அமைய வேண்டுமெனில், அதைப் பன்முகப் பரிமாணத்தோடு வளர்த்தெடுக்க வேண்டும். பெண்ணுரிமை, சாதிய விடுதலை, சமத்துவ அடிப்படைகள், பிற தேசிய இனங்களோடுள்ள ஜனநாயக அடிப்படையிலான உறவுகள் என இந்தப் பரிமாணம் அமையும்.

அவ்வாறு நிகழாதபோது தமிழ்த்தேசியமானது பலவீனமானதாக - வெற்றியடையக் கடினமான ஒன்றாகவே இருக்கும். இதுவே தமிழீழமாக உருப்பெற முடியாமலிருக்கிறது. ஒரு எண்ணக்கரு மட்டும் முழு வடிவத்தைக் கொள்வதில்லை. அது செயலாகுமிடத்தே அதற்கான பெறுமான வலுவுண்டு. இந்தக் குறைபாட்டை மறைத்துக் கொள்வதற்கே மற்றவர்களின் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதும் தம்மைப் புனிதப்படுத்தி, பிறரைத் துரோகியாக்குவதும் நடக்கிறது. துயரமான நிலை என்னவெனில், தமிழ்த்தேசியவாதத்தை விரிவும் ஆழவும் கூடிய பல்பரிமாணப் பெறுமானமாக்குவதற்கு எவரும் முயற்சிப்பதில்லை.

வெறுமனே அரச எதிர்ப்பில் மட்டுமே தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் தமிழ்த்தேசியச் சிந்தனையாளர்களும் மையங்கொண்டுள்ளமையைக் காணலாம். ஒடுக்குமுறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்புக் கூட செயற்பாட்டு வலுவுடையதாக இல்லாமல், பேச்சளவிலான எதிர்ப்பாகவே உள்ளது. இதனைக் கண்டு ஒடுக்குமுறையாளரோ அரசதரப்பினரோ நகைக்கின்றனரே தவிர, அச்சமடையவில்லை. இதை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளவும் இல்லை.

இதேவேளை அரசியல் ரீதியாக தமிழ்த்தேசியக் கட்சிகள் பிளவுண்டு சிதறிக் கொண்டிருக்கின்றன. அரச எதிர்ப்பு, பேரினவாத ஒடுக்குமுறையை மட்டுமல்ல, தமிழ்த்தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட மக்களைப் பாதுகாக்கவும் அவர்களை மேம்படுத்தவும் வேண்டும். அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம். இவை எதுவும் செய்யப்படுவதாக இல்லை. இதனால்தான் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடக்கம், வடக்கு-கிழக்கில் இருக்கும் மக்கள் கூட பிற அரசியற் தரப்புகளின் பின்னால் செல்லக் கூடிய நிலை உருவாகியுள்ளது. ஆகவே தமிழ்த்தேசியத்தைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக பலவீனப்படும் - பலவீனப்படுத்தும் வேலைகளையே இவை செய்கின்றன. தொகுத்துச் சொன்னால், ஏற்பட்டுள்ள - ஏற்படுத்தப்படும் நெருக்கடிகள், சவால்களை எதிர்கொண்டு நிமிரக்கூடிய அளவுக்கான செயற்றிட்டமும் சிந்தனையும் இல்லாத நிலையில், தமிழ்த்தேசியம் பலப்படுத்தப்படவில்லை.

### 4. தமிழ்த்தேசியம் பலவீனப்படுத்தப்படுகிறதா?

ஆம், நிச்சயமாக. அதனால்தான் தமிழ்த்தேசியச் சக்திகளின் ஒற்றுமைக்கான குரல் தூக்கலாக உயர்த்தப்படுகிறது. தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கோரிக்கை கூட இந்த அபாயத்தை உணர்ந்த நிலையினால் எழுந்த ஒன்றே. இருநிலைகளில் (தமிழ்த்தேசிய எதிர்ப்புத் தரப்பு - ஆதரவுத் தரப்பு) தமிழ் மக்கள் பலவீனப்படுத்தப்படுகின்றனர். இரட்டை அழுத்தத்துக்குட்படுகின்றனர்.

1. தமிழ்த்தேசியத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை அரசும் பேரினவாதச் சக்திகளும் தொடர்ச்சியாகவே செய்து வருகின்றன. அரசோடு இணைந்த நிலையில் பிராந்திய - சர்வதேச சக்திகளிற் சிலவும் செயற்படுகின்றன. கூடவே தமிழ்த்தேசியத்துக்கு எதிரான - அரச ஆதரவுத் தரப்புகளும் (கட்சிகள் உள்ளடங்கலாக) இதைச் செய்கின்றன. இவை அனைத்தும் இவ்வாறுதான் செயற்படும். கருத்துநிலைச் சிதைப்பாகவும் - பௌதீக ரீதியாக நிலத்திலும் சனத்தொகையிலும் சமூகப் பொருளாதாரத்திலும் வீழ்ச்சியடையச் செய்வதன் மூலமும் இது நிகழ்த்தப்படுகிறது.

2. இதேவேளை இதற்கு அனுசரணை அளிப்பதைப்போல தமிழ்த்தேசியவாதத்தைப் பேசும் இன்றைய அரசியல் - ஊடக - சமூகத்தரப்பினரும் செயற்படுகின்றனர். தமிழ்த் தேசிய அடையாளத்தையும் அந்தக் கருதுகோளையும் (உணர்வையும்) கொண்ட மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் விதத்தில் இவர்களுடைய செயற்பாடுகள் உள்ளன. விடுதலை அரசியலைச் செய்கிறோம், ஒடுக்குமுறையை எதிர்க்கிறோம், மக்களை மேம்படுத்துகிறோம் எனச் சொல்லிக் கொண்டே இனவாதப் பொறிக்குள் மக்களைச் சிக்க வைக்கின்றனர். இதனால் மக்கள் சுமைகளுக்குள்ளாகின்றனர். நெருக்கடிகளால் சுற்றியிறுக்கப்படுகின்றனர். தீராப் பிரச்சினைக்குள் தள்ளப்படுகின்றனர்.

இதனால் மக்கள் உளச் சோர்வடைந்துள்ளனர். இன்று தமிழ்த்தேசிய அரசியற் சக்திகள் பல அணிகளாகப்பிளவுண்டு சிதைவடைந்திருப்பது இதற்கு ஆதாரம். கூடவே தமது ஆட்சி அல்லது அதிகாரத்துக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகள், மாகாணசபை உள்ளிட்ட அடுக்குகளில் மேற்கொள்ளப்படும் அதிகார துஷ்பிரயோகம், வினைத்திறனின்மையான செயற்பாடுகள், ஊழல், பாரபட்சம், தூரநோக்கின்மையான திட்டங்கள், தனிநபர் அல்லது குழு நலன்சார்ந்த நடவடிக்கைகள் போன்றவற்றால் சமூக ரீதியான பாதிப்பைப் பலமான முறையில் ஏற்படுத்தியுள்ளனர்.

இலங்கையிற் காணப்படும் ஜனநாயகச் சூழலில் இவ்வாறு நிகழ்வது இயல்பாயினும் விடுதலை அரசியலுக்கும் ஒடுக்குமுறையை எதிர்கொள்வதற்கும் இது ஏற்புடையதல்ல என்பதால் தமிழ்த்தேசியமும் அதனுடைய அரசியலும் அதற்கான மக்களும் பலவீனப்படுத்தப்படுகின்றனர்.

இறுதியாக - தமிழ்த்தேசியத்தைப் பிற்போக்கான - தமிழ் மக்களுடைய வளர்ச்சிக்கு எதிரானதாகவும் மாறானாதாகவும் பார்ப்போரின் பார்வையிலிருந்து நோக்கினால்,

1. இன, மொழி, மத, பிரதேச உணர்வுகளைத் தூண்டி அல்லது அதை மறைமுகமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தமிழ்த்தேசியம் தன்னைத் தனிமைப்படுத்தியே வைத்துள்ளது. இதனால்தான் அது வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம்களுடன் கூட பொது வேலைத்திட்டத்தில் இணைய முடியாதுள்ளது. சமவேளையில் இலங்கையில் உள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களோடு ஒருங்கிணைந்து செயற்பட விதியற்றிருக்கிறது.

2. பெண்களுக்கும் ஒடுக்கப்படும் நிலையில் உள்ள சாதியினருக்குமான சமநிலைகளை இன்னும் வழங்க முடியாத குறைநிலைத் தமிழ்த்தேசியமாக உள்ளது. நாளாந்த வாழ்வின் முதல் பிரச்சினையான பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றி அதனால் கவனம் கொள்ளமுடியவில்லை. மொழியை முன்னிறுத்தி முற்போக்கான போராட்ட சக்திகளை வீணடிக்கின்றது. மனிதரிடையே காணப்படும் ஏழ்மை, ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை போன்ற அடிப்படை பொருளாதார சிக்கல்களுக்கு தகுந்த முக்கியத்துவம் தராமல் தமிழ்த் தேசியம் கவனத்தை சிதறடிக்கின்றது. முக்கியமாகச் சமூகப் பாதுகாப்பை அது கவனத்திற் கொள்ளவில்லை.

3. தமிழ்த் தேசியமானது, தமிழ் உயர்நிலை மக்களின் கருத்தியலாகவே இருக்கின்றது. நுண்கலைகள் தொடக்கம், நிர்வாக அதிகாரம் வரையில் சராசரித் தமிழருக்கு அப்பாலேயே இருக்கின்றன.

4. இன்றைவரைக்கும் தமிழ்த் தேசியவாதத்தால் முழுமையாக முகம்கொடுக்க முடியாத பிரச்சினையாகச் சாதியம் இருக்கிறது. காரணம், தமிழ்ச் சமூகத்துக்கு உள்ளே இருக்கிற ஒடுக்குமுறைகளை - ஜனநாயகமின்மையை மழுப்பியே இதுவரையான தமிழ்த் தேசியம் தன்னை நிலைநிறுத்தி வந்துள்ளது.

எனவே இங்கே முன்வைக்கப்பட்டுள்ள விவாதப்பொருள்களை மனங்கொண்டு புதிய நிலைக்கு ஈழத்தமிழரின் (தமிழ்த்தேசிய) அரசியல் முன்னெடுக்கப்படவேண்டியுள்ளது. இது காலத்தின் வலியுறுத்தலாகும்.





# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மனக்குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும் மாதமாகத் திகழப்போகிறது. உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படுவதில் சிறிது சிரமங்கள் ஏற்படும். அத்தோடு செலவுகளும் அதிகரிக்கும். பயணங்களை மேற்கொள்ளும் பொழுது கவனம் தேவை. எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். புதிய முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் விலகும். தன்னம்பிக்கை பிறக்கும். வேலை செய்யும் இடத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு மாதத்தின் நடுப்பகுதியில் நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முன்னேற்றம் நிறைந்த மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவு பணவரவு ஏற்படும். கணவன் –மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வேலையில் மறைமுக எதிரிகளால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் கவனம் தேவை. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு மகாலட்சுமி தாயாரை வழிபட வேண்டும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சவாலான மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படாது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும். அதனால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை கூட உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். குடும்ப உறுப்பினரிடம் அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். வேலைச் சுமை குறைவாக இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு தக்ஷிணாமூர்த்தியை வழிபட வேண்டும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் விவேகத்துடன் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்ததை விட அதிக அளவு பணவரவு ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். சுப காரியப் பேச்சுகள் வெற்றியைத் தரும். ஒரு சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் நெருக்கடிகள் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். மனதிற்கு மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும். வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்கு சூரிய பகவானை வழிபட வேண்டும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் காரிய வெற்றி ஏற்படும் மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். சேமிப்பு தொடர்பான சிந்தனைகள் மேலோங்கும். குடும்ப உறுப்பினர்களிடையே மனம் விட்டு பேசுவதன் மூலம் பிரச்சினைகள் வராமல் தப்பித்துக் கொள்ளலாம். மேலும் யாரையும் புண்படுத்தாமல் நடந்து கொள்வது நல்லது. வேலைச் சுமை அதிகமாக இருக்கும். தொழிலில் இருந்து வந்த போட்டி பொறாமைகள் நீங்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்கு ராமபிரானை வழிபட வேண்டும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் புத்தி கூர்மையுடன் செயலாற்றும் மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். ஒரு சிலருக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கிறது. தேவையற்ற பயணங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் சற்று பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்பட வேண்டும். வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு லட்சுமி ஹயக்ரீவரை வழிபட வேண்டும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அமைதியுடன் செயற்பட வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். ஒரு சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகளும் உண்டாகும். பணம் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் கவனம் தேவை. உடல் நலனில் அலட்சியமாக இல்லாமல் சிறிய உபாதையாக இருந்தாலும் உடனே உரிய மருத்துவரை அணுக வேண்டும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். வேலைச் சுமை அதிகமாக இருக்கும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சாதகமான மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பண வரவு ஏற்பட்டாலும் அதற்கு இணையான செலவுகளும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் ஏற்ற இறக்கம் தென்படும். மருத்துவ ரீதியாக செலவுகள் உண்டாகும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும். குடும்ப உறுப்பினரிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பொறுப்புகள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரும். வேலைச் சுமை அதிகமாக இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு வைரவரை வழிபட வேண்டும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சவால்களை சந்திக்கும் மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும் என்றாலும், பண விஷயத்தில் கவனமாக இருப்பது நன்மையைத் தரும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் விரைவில் நடைபெறும். கணவன் மனைவிக்கு இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை அதிகரிக்கும். வேலைச் சுமை அதிகமாக இருக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு விரும்பிய வேலை கிடைக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு நாகதேவர்களை வழிபட வேண்டும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்ததை விட அதிக அளவு பணவரவு ஏற்படக்கூடும். அதனால் கடன் சுமை குறைவதற்குரிய வாய்ப்புகளும் உண்டாகும். வருமானத்தை அதிகரிப்பதில் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியைத் தரும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். பயணங்களால் அலைச்சல் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். மனதைரியம் அதிகரிக்கும். சுபகாரிய முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வேலையில் சாதகமான சூழ்நிலை நிலவுகிறது.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் ஏமாற்றங்களை சந்திக்கும் மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். வரவை விட செலவுகள் குறைவாகவே இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். காதல் திருமணம் கைகூடும். தேவையற்ற பேச்சுகளை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத திருப்பங்கள் உண்டாகும். வேலைச்சுமை அதிகமாக இருக்கும். வீண் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு வேலையில் கவனம் செலுத்த வேண்டும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு நடராஜப் பெருமானை வழிபட வேண்டும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முயற்சிகள் வெற்றியடையும் மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். தேவையில்லாத செலவுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் கவனத்துடன் செயல்பட வேண்டும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காமல் இருப்பது நல்லது. ஒரு சிலருக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டாகும். திறமைகள் வெளிப்படும் சூழ்நிலை உண்டாகும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. வேலைச் சுமை அதிகமாக இருக்கும். வேலையைத் திறம்பட பொறுமையுடன் செய்வதன் மூலம் நல்ல முன்னேற்றமான சூழ்நிலை உண்டாகும்.

# ஊர்ப் புதினங்கள் மூன்று




**புதினம் 01**

ஜனாதிபதித் தேர்தல் நடக்குதோ இல்லையோ, ரணில் விக்கிரமசிங்க பரபரப்பான பரப்புரை வேலைகளைத் தொடங்கிவிட்டார். அதன் நிமித்தமாக பல்வேறு அபிவிருத்திப் பணிகள், அரச நியமனங்கள், காணி உறுதிப் பத்திரங்கள் எனப் பலவற்றை வழங்கி வருகின்றார். அண்மையில் இந்த நோக்கோடு யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்கவும், விருந்து வைக்கவும் தமிழ் அரச அதிகாரிகள் பட்டபாட்டினை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. அதுவும் வடக்கில் இருக்கின்ற ஆளுநரம்மா, பட்டிதொட்டியெல்லாம் போய் விழுந்தெழும்பி வேலைசெய்தார். அவரின் அனல் பறந்த கட்டளைகளுக்கு செயற்படும் சிப்பாய்களாக மாறி நிற்கும் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அதிகாரிகள் ரணிலை வரவேற்பதற்கான தீவிர தயார்படுத்தல்களில் ஈடுபட்டிருந்தனர். ரணில் வருவதற்கு முதல்நாள், யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய பிரதேச செயலகங்களின் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் போன்றோரை மாவட்டச் செயலகத்திற்கு அழைத்து, ரணிலை வரவேற்பது தொடக்கம், அவருக்கு குடைபிடிப்பது வரைக்குமான விடயங்கள் ஆராயப்பட்டன. அதில் முக்கியமாக, கலந்துகொண்ட அனைத்து அதிகாரிகளுக்கும் குடிபானமும், வடையும், சமோசாவும் வழங்கப்பட்டன. “இதெல்லாம் இங்க நடக்கிறதில்லயே” என ஆச்சரியத்தோடு நோக்கியபடி தந்த சிற்றுண்டிகளை அதிகாரிகள் வாங்கித் தின்றதும், கச்சேரி பெரிய அதிகாரி ஒரு குண்டைத்தூக்கிப் போட்டார். “நாளைக்கு ரணில் சேருக்கு குடுக்கிறது இந்த சோர்ட் ஈட்ஸ் தான். எனவேதான் இப்ப உங்களுக்கு இதுகளத் தந்து பரிசோதிச்சிப் பார்க்கிறம்” மனுசன் இந்த விசயத்தை சீரியஸா சொன்னாரோ, பகிடியாச் சொன்னாரோ தெரியாது. ஆனால் மறுநாள் வருகை தந்த ரணிலுக்கு அதே சிற்றுண்டிகள் தான் வழங்கப்பட்டன. “ரணிலுக்காக இவ்வளவு படிச்சு, முன்னேறின எங்கள பரிசோதனை எலிகளாக மாத்திப்போட்டாங்கள்” என நிகழ்வின் முடிவில் புலம்பினார் ஓர் அதிகாரி.

**புதினம் 02**

முல்லைத்தீவின் சிலாவத்தை - உப்புமாவெளி பகுதியில் தொடர் போராட்டம் ஒன்று நடைபெற்றுவருகின்றது. ஆனால் அந்தச் செய்தியை வெளியுலகத்திற்குத் தெரியாமல் மறைத்து நிற்பதில் கங்கணம் கட்டிநிற்கின்றனர் முல்லைத் தீவைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஊடகவியலாளர்கள். போர் முடிவுற்ற பின்னர், ஆங்காங்கே புலிகளின் பணத்தை வைத்திருந்த புலம்பெயர் பெருமுதலாளிகள் சிலர் இலங்கை அரசாங்கத்தோடும், இராணுவத்தோடும் இணைந்து கொண்டு, ஊரில் முதலீடுகளைச் செய்தார்கள். அந்த வகையிலேயே முல்லைத்தீவிற்கு 2017 ஆம் ஆண்டில் காலடிவைத்தார் கனேடிய புலம்பெயர் பெரு முதலாளி ஒருவர். கனடாவில் பல இடங்களில் சுப்பர்மார்க்கட்டுகளை வைத்திருக்கும் அவர் மீது பெண் ஒருவரை எரித்துக் கொலை செய்த குற்றச்சாட்டுக்கூட உள்ளது. ஆனால் அதையெல்லாம் கிடப்பில் வைத்துவிட்டு, ஊரை அபிவிருத்தி செய்ய கிளம்பிவிட்டார் அவர். அவருக்கு முதலிடுவதற்கு சிறுதுண்டு காணிகூட முல்லைத்தீவில் இல்லாவிட்டாலும், விடுதியொன்றில் தங்கியிருந்தபடி உள்ளூர் அரச அதிகாரிகள், இராணுவத்தினர், பிரதேச சபை மாதிரியான அரச திணைக்களங்கள் போன்றவற்றோடு டூல் பேசினார் அவர். போரில் அழிவடைந்த முல்லைத்தீவு மாவட்டத்தை சுற்றுலாவில் முதன்மையிடமாக மாற்றவே தான் வந்துள்ளதாகத் தெரிவித்துப் பணத்தை வாரியிறைத்தார். கனரக வாகனங்களை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு, பிரதேசசபை செய்யவேண்டிய பல வேலைகளைத் தானே செய்து முடித்தார். இப்படியாக முல்லைத்தீவில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், அதிகாரிகள் என அனைவரையும் நக்கினார் நாவிழந்தார் நிலைக்குள் சிக்கவைத்தார். அதனைத்தொடர்ந்து முல்லைத்தீவில் எங்கெல்லாம் பெரியளவு காணிகள் உள்ளன என்பதையும், சிக்கலில்லாமல் எடுத்துக்கொள்ளக்கூடியதாய் இருப்பவற்றையும் அறிந்து கொண்டார். அதன்படி, சிலாவத்தையின் உப்புமாவெளி கடற்கரையாக 130 ஏக்கர் காணி கிறிஸ்தவ மத நிறுவனம் ஒன்றிற்கு இருப்பதை அறிந்துகொண்டார். முறைப்படியான ஆவணங்கள் எதுவும் இல்லாதபடியால், முல்லைத்தீவில் கள்ள மணல் விற்றதனால் சிக்கலில் சிக்கிய ஒரு பாதிரியாரின் “முயற்சியால்” பெருமளவு நிதி கைமாறலுடன், காணியும் அந்தக் கனேடிய புலம்பெயர் தமிழருக்கு கைமாறியது. அதற்குப் பின்னர், அந்த 130 ஏக்கர் பகுதிக்குரிய கடற்கரையையும் நம்பி பல தலைமுறை தலைமுறையாக கடற்றொழில் செய்துவரும் ஏழை மீனவர்கள் மீது தன் கைவரிசையைக் காட்டத்தொடங்கினார் அவர். அந்த காணியோடு சேர்த்து கடலையும் தான் விலைக்கு வாங்கிவிட்டதாகவும், எனவே அதற்குள் தான் விடுதி அமைத்துள்ளதால், அங்கே யாரும் மீன்பிடிக்க முடியாதெனவும், மீறி செயற்பட்டால் சட்டநடவடிக்கை எடுப்பேன் எனவும் மீனவர்களை மிரட்டியிருக்கிறார். மீனவர்கள் மீன்பிடியைக் கைவிட்டு விட்டு, தன்னோடு இணைந்தால் தான் புதிய படகுகளைத் தருவதாகவும், அதனைக்கொண்டு தனது விடுதிக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கடலைச் சுற்றிக்காட்டி சம்பாதிக்கலாம் எனவும் தெரிவித்திருக்கிறார். அதனை ஏற்காத மீனவர்கள், போராட்டத்தில் குதிக்கத் திட்டமிட்டுள்ளனர். முல்லைத்தீவில் ஒரு போராட்டம் என்றால், அதுவும் நிலப்பிரச்சினை சம்பந்தமான போராட்டம் என்றால் அனைத்து ஊடகங்களும் குவிந்து நிற்கும் என்பதை ஊகித்துக்கொண்ட அந்த புலம்பெயர் வணிகர், முல்லைத்தீவில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களையும் அழைத்து மகாவிருந்தொன்றை ஏற்பாடு செய்திருக்கிறார். தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தொடங்கி, தான் ஒருவனே முல்லைத்தீவை மீட்க வந்த ஒரே மீட்பர் என்கிற கணக்கில் கதையளந்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் தலையாட்டிவிட்டு, நன்றாக உணவையும், குடிபானங்களையும் எடுத்துவிட்டு, வீடு திரும்பிய ஊடகவியலாளர்கள், அமைதியாகிவிட்டனர். அது போதாதென்று, புலம்பெயர் வணிகருக்கு ஆதரவாக தமது ஊடகங்களில் கட்டுரைகளையும் எழுதத் தொடங்கிவிட்டனர். அந்த விருந்தில் கலந்துகொண்ட முல்லைத்தீவின் மூத்த ஊடக ஜாம்பவான் ஒருவர் தனது கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார். விடுதி அமைந்துள்ள கடற்கரைப் பகுதியானது, விடுதி உரிமையாளரின் காணிக்குள் விரும்பி வந்துள்ளது. எனவே அவரின் காணிக்குள் விரும்பி வந்த கடலும் அவருக்கே உரித்தானது. கடற்கரையில் உள்ள மணலை ஏற்றியமையால், கடல் அரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் அவர் வாங்கியுள்ள காணிக்குள் வருகிறது என்பதுதான் உண்மைச்செய்தி. அதனை எழுதினால் கடற்கரையில் உள்ள மணலை ஏற்றிய செய்தி வெளித்தெரிந்துவிடும் என்பதை மறைக்க குறித்த ஊடகவியலாளர் தன் சோடனையைச் செய்திருக்கிறார். இந்தச் சோடனை உப்புமாவெளி, தியோ நகர் மக்களின் நிலத்துக்கான போராட்டத்தையே மறைத்துநிற்கிறது என்றால் பாருங்களேன்.

**புதினம் 03**

ரணில் ஆட்சிக்கு வந்ததும் வலிகாமம் வடக்கில் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்பட்டன. அவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளில் கிட்டத்தட்ட ஐநூறு ஏக்கர் பகுதிக்குள் (பல கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளடக்கம்) மக்களை நுழைய வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அந்தப் பகுதிகளிலெல்லாம் மிதிவெடி அபாயம் இருப்பதனால் யாரும் நுழையக்கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகளவு விவசாயக் காணிகளைக் கொண்டிருக்கின்ற இந்தப் பகுதிகளை நம்பித்தான் அப்பிரதேச மக்கள் இருக்கின்றனர். 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கு மக்கள் வாழவுமில்லை. விடுதலைப் புலிகளின் படை நடவடிக்கைகள் இடம்பெறவுமில்லை. இவ்வாறிருக்க 35 வருடங்களாக அதற்குள் பாரியளவு முகாம்களை அமைத்து இராணுவம் மட்டுமே இருந்தது. எனவே இப்போது புதிதாக மிதிவெடி எங்கிருந்து வந்தது என விவசாயிகள் கேள்வியெழுப்புவதில் நியாயமுண்டு. பலாலியில் பெருமளவு காணிகள் இந்தியாவுக்கு விற்கப்படவுள்ளன என்கிற செய்திகள் அரசல்புரசலாக அடிபடும்போது, இந்தப் பிரவேசத் தடை ஏற்படுத்தப்பட்டிருப்பதானது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகின்றது. அது மட்டுமல்லாது, அண்மையில் விடுவிக்கப்பட்ட மிதிவெடி அபாயவெளிக்கு வெளியே உள்ள தனது காணியைத் துப்பரவுசெய்யக்கூட இராணுவம் அனுமதிக்கவில்லை என நண்பர் ஒருவர் சொன்னார்.



# அகம், புறம், சங்க(ம)ம்
## அகலி தாக வனைமோ



எனக்கு இன்றும் நெஞ்சில் பசுமையாக நினைவிலிருக்கிறது. சிறுவயதில் எங்களுக்கெல்லாம் தூர்தர்ஷன் எனப்படும் சென்னை தொலைக் காட்சியில் வாரம் ஒரு படம் ஒளிபரப்பு வார்கள். இப்போது போல் அப்போதெல்லாம் நிமிடத்தில் 100 அலைவரிசைகளை மாற்ற முடியாது. ஒரே ஒரு தொலைக்காட்சி , அதில் என்ன வந்தாலும் நீங்கள் பார்த்தே ஆகவேண்டிய கட்டாயம். 1987-88 ஆம் ஆண்டு என்று ஞாபகம். அப்பொழுது தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது துலாபாரம் திரைப்படம் . படத்தின் பெயர் மற்றும் பணியாற்றுபவர்கள் பெயர்கள் வரும்பொழுது சண்டைப்பயிற்சியாளரின் பெயர் வருகிறதா என்று பார்ப்போம். அப்படி எதுவும் வரவில்லையென்றால் அந்த படத்தை பார்க்காமல் வெளியே விளையாடச் சென்றுவிடுவோம் . என் போதாத காலம். இந்தப் படத்தில் சண்டைப்பயிற்சியாளரின் பெயரும் வந்தது. தொடக்கத்திலிருந்து இறுதி வரைக்கும் அழுகை . கண்ணீர் விட்டு தேம்பி தேம்பி அழுதிருக்கிறேன். என்னிடம் யாராவது நீங்கள் பார்த்ததிலேயே சோகமான படம் எதுவென்று கேட்டால் ,துலாபாரம் படம் தானென்று தயங்காமல் என்றும் சொல்வேன். அந்த படத்தில் ஒரு காட்சி வரும். சாரதா (கதாநாயகி) பிறந்த வீட்டில் எல்லாவற்றையும் இழந்த பிறகு தனது கணவனை (ஏ.வி.எம் ராஜன்) நம்பி திருமணம் செய்திருப்பாள். ஆனால் தொழிற்சங்கப் பிரச்சினை காரணமாக ஏ.வி.எம் ராஜனை கொலை செய்துவிடுவார்கள். அப்பொழுது அந்த தருணத்தில் சாரதாவின் கையறு நிலைமையை வெகு சிறப்பாக படமாக்கியிருப்பார்கள்.

சமீபத்தில் எழுத்தாளர் சாம்ராஜ் அவர்களின் கவிதை குறித்தான அமர்வினைக் கேட்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. அந்த அமர்வில் கவிதை வாசிப்பினை குறித்தும் ,தமிழில் கவிதை குறித்தான வரலாறு குறித்தும் மிக விரிவாகப் பேசியிருப்பார். அந்த அமர்வில் சங்க காலத்தில் கவிதை எவ்வாறு உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தது என்பதை எடுத்துக்காட்ட புறநானுற்றில் வரும் இந்த பாடலைப் பற்றி சொல்லி அதில் வரும் “அச்சுடைச் சாகாடு ஆரம் பொருந்திய சிறுவெண் பல்லி போல” எனும் உவமையின் சிறப்பை பற்றி சிலாகித்து பேசினார். எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களும் தனது சங்கச் சித்திரங்கள் நூலில் இந்தச் சங்கப்பாடலை வெகுவாக ரசித்து எழுதியிருப்பார்

**புறநானூறு, 256 (அகலி தாக வனைமோ?)**
**பாடியவர்: பெயர் தெரியவில்லை.**
**திணை: பொதுவியல்.**
**துறை: கையறு நிலை.**

**பொதுவியல் திணை :** வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்ற ஒன்பது புறத்திணைகளிலும் கூறப்படாமல் எஞ்சி இருக்கும் பிற விடயங்களை தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**முதுபாலைத் துறை :** தன் கணவனை இழந்த அல்லது கைவிடப்பட்ட மனைவியின் தனிமை அல்லது இழப்பை அல்லது கையறு நிலையைக் கூறுதல்.

**பாடலின் பின்னணி:-** முதுமக்கள் தாழி நமக்கெல்லாம் தெரியும்தானே .இறந்தவர்களை அதனுள் இட்டு மண்ணோடு புதைப்பது அன்றைய வழக்கம். இந்தப் பாடலில் வரும் தனது கணவனை இழந்த பெண்ணிற்கு இந்த உலகமே இருண்டு போய்விடுகிறது. தனது கணவனை நம்பி பிறந்த வீட்டை விட்டு வந்த பெண்ணிற்கு போக்கிடம் எதுவுமில்லை. அத்தகைய கையறு நிலையில் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணால் என்ன செய்யமுடியும்?இத்தனை காலம் கணவனை நம்பி அவன் போகுமிடமெல்லாம் அவன் வழியே சென்றவளுக்கு என்ன செய்வதன்றே தெரியவில்லை. வண்டியின் அச்சில் சிக்கிக்கொண்ட வெளிறிய பல்லி எவ்வாறு வண்டி போகுமிடமெல்லாம் போகுமோ, அதுபோன்று தலைவனின் வழி சென்றவள். தன் துக்கம் தாளாமல் தாழி செய்யும் குயவனைப் பார்த்து, ‘அவனோடு சேர்த்து என்னையும் புதைப்பதற்கு பெரிய தாழி ஒன்று செய்வாயாக’ என்று இரந்து கேட்கிறாள். எவ்வளவு பெரிய துயரத்தை எவ்வளவு எளிதாக இரண்டே வரிகளில் சொல்லிவிட முடிகிறது . இந்தப் பாடலை பாடிய கவிஞர் கண்டிப்பாக பெண்ணாகவே இருக்கவேண்டும்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே**
**அச்சுடைச் சாகாடு ஆரம் பொருந்திய**
**சிறுவெண் பல்லி போலத் தன்னோடு**
**சுரம்பல வந்த எமக்கும் அருளி**
**வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி**
**அகலி தாக வனைமோ**
**நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே**

**பொருள்:-**
தாழி செய்பவனே தாழி செய்பவனே
தருமம் நிறைந்த பழைய ஊரின் தாழி செய்பவனே
அச்சில் சுழலும் வண்டிச் சக்கரத்தில் ஒட்டியிருக்கும்
சிறிய வெளிறிய பல்லி போல
இவனுடன் பல விதமான பாதைகள் தாண்டி வந்த
என்னிடமும் கனிவு காட்டுவாயாக.
மலர் நிரப்பி மண்ணில் இறக்கப்படும்
உறுதியான பெரிய தாழியை
இன்னும் பெரிதாக வனைவாயாக.


Best Start
Best Life
PLATFORM 3
இலவச பாலர் பள்ளி: 2024 க்கு உங்களின் பிள்ளையைப் பள்ளியில்சேருங்கள்
விக்டோரியாவில் மூன்று, நான்கு வயதுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச பாலர்பள்ளி கிடைக்கும். இதனால், ஒரு பிள்ளைக்கு ஆண்டொன்றிற்கு ஒருமுறை $2500 வரை குடும்பங்களுக்குச் சேமிப்பாகும்.
இரண்டு ஆண்டுகள் பாலர்பள்ளியில் கற்பது உங்கள் பிள்ளையின் திறன்களை மேம்படுத்த உதவுவதால் அந்தப்பிள்ளை பாடசாலையிலும், வாழ்க்கையிலும் திறமையாகச் செயற்படும்.
பாலர்பள்ளி அனைவருக்கும் இலவசமாகும். 'ஹெல்த் கெயர் காட்' (Health Care Card) அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது இதைப்போன்றது) உங்களுக்குத் தேவையில்லை
vic.gov.au/kinder/tamil இல் அதிக தகவல்களைப் தேடிப்பார்க்கவும்.
THE EDUCATION STATE
VICTORIA State Government
Department of Education
KINDERGARTEN Victorian Government Approved


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

Transco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU